சிலம்பு-௧௭]　　　பிரமாதி—ஆடி　　　[பரல்-௪

தமிழ் இலக்கியங்களிற் காணப்படும் இசைப் பகுதிகள்

[ஆசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

இசை என்பது மிக்க மென்மையும், நுண்மையும் வாய்ந்து, செவிப்புலனைக் குளிர்வித்து, உள்ளத்தைக் கனிவிக்கும் இனிய ஓசையேயாகும். தும்பி, வண்டு, குயில், கிளி, பூவை முதலிய உயிர்களிடத்து இவ்வின்னோசை இயற்கையாகவே அமைந்து இன்பம் செய்கின்றது. மக்கள் தம் நுண்ணறிவு மாட்சியால் பற்பல வகையாகிய இன்னிசைகளைத் தம் மிடற்றிலிருந்தும், கருவிகளிலிருந்தும் எழுப்புகின்றனர். இசை இயல்புகளையும் வேறுபாடுகளையும் சிறப்பாக அறியாவிடினும் பொதுவகையில் இசையை விரும்பாதவர்கள் யாரும் இல்லை. பச்சிளங்குழவியும் இசையை விழைகின்றது. ஆவினங்கள், இசையைக் கேட்டு, அசையிடாதிருக்கின்றன. யானை முதலிய வன விலங்குகளும், பாம்பு முதலியனவும் இசைக்கு வசமாகின்றன. அறிவே உருவாகிய ஆண்டவனும் இசையை விரும்புகின்றான். அவன் இசை வடிவமாக இருக்கின்றான் என்றும், இசையின் பயனாக உள்ளான் என்றும், இசை பாடுகின்றான் என்றும் ஆன்றோர் கூறுவர். "ஏழிசையாய் இசைப்பயனாய்," என்று சுந்தரரும், "எம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்று அப்பரும் கூறுதல் காண்க. கலைகட்கெல்லாம் தெய்வமாகிய நாமகள் கையில் வீணையை அமைத்துள்ள நம் முன்னோர்கள் இசைக்கலையை எவ்வளவு சிறந்ததாகப் போற்றியிருத்தல் வேண்டும்.

இனி, தமிழ்மக்கள் பண்டுதொட்டு இசையை எவ்வாறு போற்றிவந்தனர் என்பதனைத் தமிழ்நூல்களின் ஆதரவு கொண்டு நோக்குவோம். தமிழ்மொழியானது மிகப் பழைய காலத்தில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பெரும் பிரிவுடையதாக இருந்தது. அதனால் முத்தமிழ் என்ற வழக்கு உண்டாயிற்று. பழைய சங்ககாலங்

களில் முத்தமிழ்க்கும் இலக்கண, இலக்கியங்கள் பற்பல இருந்தன. ஆசிரியர் அகத்தியனார் இயற்றிய அகத்தியம் என்பது முத்தமிழ் இலக்கணமே. தலைச்சங்கப் புலவர்கள் இயற்றிய **பெருநாரை, பெருங்குருகு** என்பனவும், நாரதர் இயற்றிய **பஞ்சபாரதீயம்,** அகத்தியர் மாணாக்கராகிய சிகண்டி என்பவர் இயற்றிய **இசை நுணுக்கம்** முதலாயினவும் பழைய இசைத் தமிழ் நூல்களாம்.

ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளின்முன் தோன்றிய பேரிலக்கணமாகிய **தொல்காப்பியத்தில்** இசையைப்பற்றிய குறிப்புக்களும், இசைபாடுதலையே தொழிலாக உடைய பாணர் முதலானவர்களைப்பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. அந்நூலிலே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்கட்கும் வெவ்வேறு வகையான யாழ் அல்லது பண் உண்டு என்று குறிப்பிடப்படுவதால் அக்காலத்தே தமிழகம் முழுதும் இசைக்கலை பரவியிருந்ததென்பதும், எவ்வகைக் குடிமக்களும் இசை உணர்ச்சி உடையராய் இருந்தனர் என்பதும் பெறப்படும். இரண்டாயிரம் ஆண்டுகளின்முன் விளங்கிய தெய்வப்புலமைத் **திருவள்ளுவர்,** குழல், யாழ் என்னும் இசைக்கருவிகளைப்பற்றியும், பண்ணைப் பற்றியும் திருக்குறளில் கூறியுள்ளார். மற்றும் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் அவை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. **சிலப்பதிகாரக்** காப்பியத்தில், இசைக்கருவிகளின் பெயர்களும், இலக்கணங்களும், கருவிகளிலும் கண்டத்திலும் இசைகள் பிறக்கும் முறைமையும், பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அக்காலத்திலே, பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என நால்வகை யாழ்கள் இருந்தன. பேரிகை, இடக்கை, உடுக்கை, மத்தளம், திமிலை, குடமுழா, தண்ணுமை, தடாரி, முதலிய முப்பத்தொரு வகை தோற்கருவிகள் வாசிக்கப்பட்டன. ஆயிரம் நரம்புடைய ஆதி யாழ் என்பதொன்று இருந்ததென்றும் ஆதியிசை பதினோராயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்று (11,991) என்றும் கூறினால் பெரும்பாலார் வியப்படையக்கூடும். ஆனால் பழந்தமிழ் நூல்கள் அவற்றின் உண்மையைத் தெரிவிக்கின்றன.

உ.நட்ஜம் முதலிய ஏழிசைகளுக்கும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி. விளரி, தாரம் என்னும் தமிழ்ப்பெயர்கள் வழங்கின. இப்பொழுது ஆலாபனம் என்பது, ஆளத்தி என்னும் பெயரால் வழங்கிற்று. த, ந, ம, என்னும் மூன்று மெய்யினங்களோடு, குற்றெழுத்து ஐந்தும், நெட்டெழுத்து ஐந்தும், தென்ன, தென என்னும் அசைகளும் ஆளத்தி செய்தற்கு உரி

யவாயிருந்தன. மூலாதாரம் தொடங்கி, எழுத்தின் நாதம் ஆளத்தியாய், பின்பு இசையென்றும், பண் என்றும் பெயர் பெறலாயின. ஜநக ராகங்கள், பண் என்றும், ஜந்ய ராகங்கள் திறம் என்றும் கூறப்பட்டன. இசைப்பாட்டுக்கள் எல்லாம் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களால் வழங்கின. வரி, உரு முதலியவற்றில் எத்தனையோ பல வகைகள் உண்டு. இப்பொழுது கீர்த்தனங்கள் என்று கூறப்படுவன உருக்களில் அடங்குவனவாகும். பலவகையான கூத்துக்களோடும் வரிப் பாடல்கள் பாடப்பட்டன. கொற்றி, பிச்சி, சித்து, சிந்து, ஆண்டி, அம்மனை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேணம் முதலிய எண்ணிறந்த கூத்துவகைகளும், அவற்றிற்குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன. அவை பெரும்பாலும் மகளிருடைய விளையாட்டுக்களாக விளங்கின. மற்றும் மகளிர் கிளியோட்டுவதும் பாட்டு, சாத்தியடிப்பதும் பாட்டு. உழத்தியர் நாற்று நடுவதும் பாட்டு; களைபறிப்பதும் பாட்டு. இவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுக்களோடு நிகழ்ந்தன. இவ்வாற்றால் முற்காலத்தில் தமிழகத்திருந்த ஆடவரும், மகளிரும் இசையும் கூத்தும் ஆகிய இன்ப விளையாட்டுக்களால் களி சிறந்து உடம்பும், உள்ளமும், தளிர்த்திருந்தனர் என்னும் உண்மை புலனாகும் என்க. அம்மனை, பந்து, ஊசல், வெள்ளை என்னும் வரிப்பாட்டுக்களைச் சிலப்பதிகாரத்தில் காணலாகும். அன்பே வடிவாகிய மாணிக்கவாசகப் பெருமான், ஓதுவார் உள்ளத்தை உருக்கும் திருவாசகத்திலே, தெள்ளேணம், சாழல், தோணோக்கம், உந்தி முதலாகிய வரிப்பாடல்களை அமைத்துள்ளார் என்றால், அப்பாடல்களும் கூத்துக்களும், அந்நாளில் எவ்வளவாகக் கொண்டாடப்பட்டிருத்தல் வேண்டும்.

இனி, தமிழிலே, ஒப்பற்ற இசைப்பாக்களாக இப்பொழுது நமக்குக் கிடைத்திருப்பன யாவை என நோக்குதும். சிலப்பதிகாரத்தில் உள்ள கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ் வரி, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை என்னும் ஆறு காதைகளும், இசைப்பாக்களின் தொகுதியேயாகும்.

“பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய”

“பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணுங்

தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே. "

என்பன முறையே கானல்வரியிலும், வாழ்த்துக் காதையிலும் உள்ளன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருவாய்மொழி முதலியனவோ. வானோரும் அளவிடற்கரிய சிறப்புடைய இசைப்பெருஞ் செல்வக்களஞ்சியங்களாகும். அவற்றிற்குரிய பண்களின் இயல்பறிந்து முறைப்படி பாடுவார் தொகை அருகி வருவது பெரிதும் இரங்கத்தக்கதாகும்.

இதுகாறும் முத்தமிழில் ஒருபகுதியான இசையைப் பற்றியே சிறிது ஆராய்ந்தோம். மற்றொரு பகுதியான இயற்றமிழை நோக்கில், அதுவும் இசையுடன் விரவியே நடைபெறுதல் புலனாகும். தொல்காப்பியனார் சொற்றொடர்களின் ஓசையமைதிக்கு வண்ணம் என்று பெயர் கொடுத்து அதனை இருபது வகைப்படுத்தியுள்ளனர். வல்லெழுத்துப் பயின்று வருவது வல்லிசை வண்ணம், மெல்லெழுத்துப் பயின்று வருவது மெல்லிசை வண்ணம், நெட்டெழுத்துப் பயில்வது நெடுஞ்சீர்வண்ணம், குற்றெழுத்துப்பயில்வது குறுஞ்சீர்வண்ணம் என்று இவ்வாறு வண்ணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனாலும் செய்யுட்களெல்லாம் எதுகை, மோனை முதலிய தொடை விகற்பங்களோடு பாடப்படுதலாலும் இயற்றமிழ்ப் பாக்களும், இசையமைதி பெற்றிருப்பது நன்கு புலனாகும். வெண்பா முதலிய பாக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான இசையுடனேயே பண்டுதொட்டு ஓதப்படுகின்றன. அவற்றுள்ளும் கலிப்பா, பரிபாட்டு என்பனவற்றை இசைப் பாக்கள் என்றே **பேராசிரியர்** முதலிய பேருரையாளர்கள் கூறுவாராயினர். எட்டுத்தொகையின் ஒன்றாகிய பரிபாடற் செய்யுட்கள் ஒவ்வொன்றுக்கும் பண் வகுத்திருப்பதும் நோக்கற்பாலது. பாலையாழ், நோதிறம், காந்தாரம் என்ற பண்கள் அதிற் குறிக்கப்பட்டுள்ளன. இசை வகுத்தோராக ஒருபதின்மர் பெயர் அதிற் காணப்படுதலில் அப்பொழுது இசைவாணர்கள் எவ்வளவு மிகுதியாக இருந்திருத்தல் வேண்டும் என்று கருதலாகும். மற்றும் வெண்பா முதலிய பாக்களுக்கு இனமாக வகுக்கப்பெற்ற தாழிசை துறை முதலாயினவும் இசைப்பாக்களே யாதல் வேண்டும்.

மற்றும் மக்களுடைய உள்ளக்கிளர்ச்சியாகிய வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், வெகுளி, நகை, சாந்தம் என்பவற்றை மெய்ப்படத் தோற்றுவிக்கும் கவிதைகள் எல்லாம் இசையமைதியுடையனவே என்னலாம். தொல்

காப்பிய மெய்ப்பாட்டியலில் உள்ள உணர்ச்சியாகிய சுவைகளுக்கு இலக்கணம் கூறப்பட்டிருத்தலின், அக்காலத்திலேயே அத்தகைய செய்யுட்கள் மிக்கிருந்தனவாதல் வேண்டும். நமக்குக் கிடைத்துள்ள இடைக்காலத்து நூல்களிலும், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலியன சுவையுணர்ச்சிகள் ததும்பப்பெற்ற பாடல்களாக அமைந்தனவாகும்.

இராமன் வனம் புகுவான் என்ற சொல்லைக் கேட்ட அளவில் அயோத்திமாநகரம் எய்திய துயரத்தைக் கம்பர் வர்ணித்திருக்கும் பாடலில் இரண்டை நோக்குவோம்:

" ஆவும் அழுத ; அதன் கன்றழுத ; அன்றலர்ந்த
பூவும் அழுத ; புனற் புள்ளழுத ; கள்ளொழுகும்
காவும் அழுத ; களிறு அழுத ; கால் வயப்போர்
மாவும் அழுதன ; அம்மன்னவனை மானவே."

" கையால் நிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார் ;
உய்யாள்பொற் கோசலையென் றோவாது வெய்துயிர்ப்பார் ;
ஐயா இளங்கோவே ஆற்றுதியோ நீயென்பார் ;
நெய்யூர் அழலுற்றது உற்றார் அந்நீணகரார்."

அவலச்சுவை என்னும் சோகரசம் இவற்றில் எவ்வளவு ததும்புகின்றன பாருங்கள்.

" செல்லுஞ் சொல் லல்லாவெதிர் தம்பியும், தெவ்வர் சொல்லும்
சொல்லுஞ் சுமந்தேன் ; இருதோள் எனக் கும்பியோங்கும்
கல்லுஞ்சுமந்தேன் ; கணைப்புட்டிலும் கட்டமைத்த
வில்லும் சுமக்கப்பிறந்தேன் ; வெகுண்டு என்னை யென்றான்-"

சீற்றம் தணியுமாறு கூறிய இராமருக்கு எதிராக எனது சீற்றத்தால் என்ன பயன் என்று இலக்குமணன் கூறும் மாற்றத்திலும் அவனது கோப உணர்ச்சி பொங்கித் ததும்புதலை அங்கை நெல்லியெனக் காட்டும் இச்செய்யுளின் அருமையை நோக்குங்கள். இனி, சுந்தரமூர்த்திகள் பரவைநாச்சியாரைக் கண்டதனைத் தெரிவிக்கும்.

" கற்பகத்தின் பூங்கொம்போ, காமன்றன் பெருவாழ்வோ,
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ, புயல் சுமந்து
விற்குவளை பவள மலர் மதி பூத்த விரைக் கொடியோ,
அற்புதமோ, திருவருளோ, அறியேன் என்றதிசயித்தார்."

என்னும் அருமைத் தெய்வப்பாடலில் விளங்கும் உவகை வியப்பு என்னும் சிருங்கார, அற்புத, ரச உணர்ச்சிகளை எங்ஙனம் அளவிட்டு உரைக்க வல்லேம் !

இங்ஙனம் இவ்விசை மயமாக இருக்கும் செந்தமிழ்ப் பாடல்கள்பாற்கடல்போல்பரந்துள்ளன. அவற்றையெல்லாம் படித்தறிந்து இன்புறவேண்டியது தமிழ்மக்கள் கடனேயாகும்.

இசை இன்பம்

[திரு. N. K. வேலன் அவர்கள் B. A.]

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்". இப் பாடல்களைப் பாடினாலும் பாடக் கேட்டாலும் எம்மையும் அறியாமல் மனங்கசிந்து உருகுகின்றோம். இப் பாடல்கள் விலங்குகளையும் பறவைகளையுங்கூட ஈர்க்குந் தகையனவாய் உள்ளன. இசையோடு கூடிய பாடல்கள் உயிர்ப் பொருள்களை எங்ஙனம் ஈர்க்கின்றன என்பது ஆராய்தற்குரியது. ஒலி அலைகள் நீர் அலைகளைப்போன்று ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்குச் செல்கின்றன. இவ் ஒலி அலைகள் நம் உடலில் வந்து தாக்குவதால் நமக்கு ஒருவகை உணர்ச்சி உண்டாகின்றது. இதனால் உடலின் உள்ளே இருக்கும் நரம்புகள் தூண்டப்பெற்று நமக்கு இன்ப உணர்ச்சி பிறக்கின்றது. இன்னிசைப் பாடல்களைச் செவியுறுவதால் நோயினாலும் துன்பத்தினாலும் இறுகிய நரம்புகள் தளர்வுற்று அத்துன்பங்கள் நீங்கிவிடுகின்றன.

உலகின் பல்வேறு இடங்களில் இசையின் தன்மைகளைப் பற்றி இடைவிடாது ஆராய்ச்சி நடந்து வருகின்றது. இவ் ஆராய்ச்சியாளர்கள் மருத்துவச்சாலை, சிறைச்சாலை, தொழிற்சாலை முதலிய இடங்களில் இசைக் கருவிகளை அமைத்து அவற்றினால் ஏற்படும் நன்மைகளை விளக்கிக்காட்டி இருக்கின்றனர். கிராவ்காவ் (Kravkov) என்னும் மேல்நாட்டு அறிஞர் ஒளிமங்கிய கண்களையுடையவர்கள் அடிக்கடி இசைக்கலை பயின்று வந்தால் கட்பார்வை நூற்றுக்கு இருபத்தைந்துமடங்கு மிகுதிப்படுவதாகக் கண்டுபிடித்திருக்கின்றார். சிக்காகோ (Chicago) நகர மருத்துவச்சாலையில் உடல் நலிவுற்றிருந்த ஒரு பெண் தான் பெற்ற குழந்தையைத் தன்னிடம் கொண்டுவரக்கூடாதெனப் பித்துப்பிடித்தவள் போன்று கதறிக்கொண்டிருந்தனள் என்றும், அங்கு ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்த ஓர் ஆங்கிலப் புலவர் சில தாலாட்டுப் பாடல்களை இசைக்கருவியுடன் சேர்த்துப் பாடினார் என்றும், ஒன்றிரண்டு பாடல்களைக் கேட்டவுடன் குழந்தையை வெறுத்து ஒதுக்கிய அப்பெண் மீண்டும் அதனைத் தன்னிடம் கொண்டுவந்து கொடுக்கும்படி வேண்டினள் என்றும் கூறப்படுகின்றது. மற்றொரு பெண் வலிப்பு நோயினால் துன்பப் பட்டதாயும், ஒருநாள் வலிப்பு நோய் தொடங்கும் வேளையில் அண்டைவீட்டில் யாரோ ஒருவர் பாடுவதைக் கேட்டவுடன்

அந்நோய் வராது நின்றுவிட்டதென்றும், அன்று முதல் வலிப்புத் தோன்றும்பொழுதெல்லாம் மருந்து உட்கொள்ளுவதற்குப் பதிலாக இன்னிசைப் பாடல்களைக்கேட்டு அதனாலேயே நோய் நீங்கப்பெற்றனள் என்றும் நாம் அறிகின்றோம்.

அமெரிக்காவில் பெண்டர் (Bender) என்னும் அறிஞர் இசைக் கருவிகளின் உதவியினாலேயே நூற்றுக்கணக்கான குழந்தைகளின் நோய்களைப் போக்கியுள்ளார். எர்டுமால் (Erdmal) என்னும் மற்றோர் அறிஞர் நோயாளிகளுக்கு மயக்க மருந்து கொடுப்பதற்குப் பதிலாக நல்ல பாடல்களைக் கேட்கும்படி செய்து, அவர்கள் அப்பாடல்களில் ஈடுபட்டிருக்கும் நேரம் பார்த்து அவர்களது நோய்க்கட்டிகளை அறுத்து நலமடையச் செய்துள்ளனர். இங்ஙனமே ஒரு போர்வீரனது காலின் உள்ளே புதைந்திருந்த துப்பாக்கிக் குண்டு அவன் இசையின் இன்பத்தில் ஆழ்ந்திருக்கும்போது சிறிதும் துன்பமின்றி அகற்றப்பட்டதெனவுங் கூறுவர்

இசையின் இன்பத்தையும் அதனால் விளையும் நலன்களையும் அளவிட்டு உரைத்தல் அரிது. இசையின் தன்மைகள் கேட்போரின் உணர்ச்சிக்கு ஏற்றவாறு மாறுபடுகின்றன. கொட்டு அடிப்பதனால் பலருக்குக் களிப்பு உண்டாகிறது. மற்றும் சிலர் இதனை வெறுக்கின்றனர். இங்ஙனமே கொம்பு ஊதுவது சிலருக்கு இன்பம் பயப்பதாயும் இன்னும் சிலருக்குத் துன்பம் விளைப்பதாயும் இருக்கின்றது. மெல்லிய இசைப் பாடல்கள் குழந்தைகளை உறங்க வைக்கும் தன்மையனவாக இருக்கின்றன. தாலாட்டுப் பாடல்களை 'நீலாம்பரி' என்னும் இசையில் பாடினால் மிகவும் இனிமையாக இருக்கின்றது. கொடிய பாம்புங்கூட குழல் ஓசையைக் கேட்டு மயங்கி விடுகின்றது.

பித்து நோய் கொண்டவர்களையும் இசையினால் மயக்கி விடலாம் என்பது (William Wall) உவில்லியம் வால் என்னும் ஆராய்ச்சிக்காரர் கண்டறிந்த உண்மை ஆகும். இவ் அறிஞர் ஒருநாள் பித்து நோய் பிடித்தவர்களின் இடையே ஓர் இசைக் கருவியை எடுத்துச் சென்று அதனை மீட்டினர் என்றும், அதனை மீட்டியவுடன் அந்நோயாளிகள் எல்லாம் தங்கள் முரட்டுத்தனத்தை விடுத்துப் பாடவும் ஆடவும் தொடங்கினர் என்றும், இங்ஙனம் அவர்களை நாடோறும் பாடச் செய்ததன் பயனாய் அவர்களது பித்தம் தெளிந்து நலமெய்தினர் என்றும் கூறுவர்.

மேல் நாடுகளின் தொழிற்சாலைகளில் ஒலிபரப்பி என்னும் இசைக்கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வேலை செய்யும் கூலி ஆட்கள் பாட்டுகளைக் கேட்டுக்கொண்டே சோர்வும் சலிப்புமின்றித் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்துவருகின்றனர். இம்முறையினால் தொழிற்சாலைகளில் நூற்றுக்குப் பதினொன்று ஆக வேலை விரிவடைந்திருப்பதாய்க் கணக்கு எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே இசைப்பாடல்கள் உடல் நோய் மனநோய் முதலியவற்றைப் போக்குவதுடன் தொழில் முறையை விரிவடையச் செய்யவும் பயன்படுகின்றது. ஏற்றப்பாட்டு, தோணிப்பாட்டு முதலிய பாட்டுக்கள் நம் நாட்டில் பண்டைக்காலத்திலிருந்தே வழங்கி வருகின்றன. பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்களுக்கு இவைபோன்ற பாடல்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. தேவாரம், திருவாசகம் முதலிய பேரின்பப் பாடல்களைப் பிறவி நோய்க்கு மருந்தெனக் கூறலாம்.

"இராஜத் துரோகம்"

ஜெர்மானிய நாஜி அரசாங்க உடல்நல ஆராய்ச்சியாளர் கழக வுறுப்பினர்களுள் ஒருவராகிய டாக்டர் விர்ஸ் என்பவர் கூறுவது:—

"மீதூண் உண்ணல், அதிலும் அளவிற்கு மிஞ்சிப் புலாலுண்ணல், பெரும்" இராஜத் துரோகம்" (அரச வஞ்சம்) ஆகும். அளவிற்கு மிஞ்சி உண்ணும் ஒவ்வொரு ஜெர்மனும் நாட்டுப் பொருளாக்கத்திறனுக்கு மேற்பட்ட பொருள்நுகர்வுத்திறனை மிகுத்து, அதனால் ஜெர்மானியப் பொதுமக்களின் ஊட்டத்திற்கே கேடு சூழ்கின்றவனாவான். ஆகவே மீதூண் உண்ணல் உடல் நலக்கேட்டை விளைப்பதொரு புறமிருக்க, பெரும் "இராஜத் துரோகமும் ஆகும்."

கள்ளனைத் திருத்திய கன்னி

(திரு. பாக்கியம் அம்மையார் வரலாறு)

[வித்துவான் மறை. திருநாவுக்கரசு அவர்கள்]

இராமநாதபுரம் ஜில்லா அறுப்புக்கோட்டைக்கு அடுத்த **மல்லாங்கிணறு** என்ற சிற்றூரில் புராட்டஸ்டாண்ட் கிறிஸ்துவத் தமிழ்க் குடும்பத்தில் 19-ம் நூற்றாண்டின் நடுவில் இவ்வம்மையார் (பாக்கியம் அம்மாள்) தோன்றினார். இவர் இயற்கையிலேயே இளகிய மனமுடையவர்; தன்னைப் பகைப்பவர்களிடமும் பேரன்பு பாராட்டும் நல்லியல்புடையவர்; தான் பட்டினியிருந்து பிறர் பசி நீக்கும் பெரியார்; கொலையாளிக்கும் வேண்டியதை உதவும் இரக்க முடையவர் என்றால் மற்றவர்கட்கு இவர் செய்யும் உதவிகளைக் கூறவேண்டியதில்லை. அன்பே வடிவாக வந்தவர். இவ்வளவு உயர்குணங்கட்கும் மேலாக இவரிடத்தில் உண்மையான தெய்வபக்தி குடிகொண்டிருந்தது. தாம் செய்கின்ற எச்செயலையும் கடவுள்தான் செய்விக்கின்றார் என்ற முழு நம்பிக்கை யுடையவர். இவ்வளவு சிறப்புக்கள் நிறைந்த இவ்வம்மையார் தமது இருபதாம் வயது முதற்கொண்டு தொடக்கப் பள்ளிக்கூட ஆசிரியராகத் தொழில் செய்துவந்தார். திருமணஞ் செய்துகொள்ளாது கன்னியாகவே காலங் கடத்தினார். இப்படிப்பட்டவரை ஏழைகளும் உறவினர்களும் மற்றவர்களும் இவர்தம் மாணவர்களும் பெரிதும் விரும்பிக் கொண்டாடியதில் வியப்பொன்று மில்லை. பல்லாவரத்தில் ஒரு மிஷன் பள்ளிக்கூடமுண்டு. அதில இவ்வம்மையார் தம் 50-வது வயதில் தலைமை ஆசிரியராக வந்தமர்ந்தார். 1914-ல் யான் இளம்பையனாக அவ்வம்மையிடங் கல்வி கற்றுவந்தேன். அக்காலத்தில் தம் வாழ்க்கையில் நடந்த சில அரிய நிகழ்ச்சிகளை மாணவர்களாகிய எங்களிடத்தில் அம்மையார் சொல்லியிருக்கின்றார். அவற்றில் இரண்டை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

சென்னைக் கிண்டியை அடுத்ததோர் சிற்றூரில் (மேலச்சேரி) இவர் கிறித்துவப் பள்ளியில் ஆசிரியராகவும் அப்பள்ளிக் கூடத்தைச் சார்ந்த சிறு பெண்கள் விடுதிக்கு (ஹாஸ்டல்)ப் பார்வையாளராகவும் (சூப்பிரின்டெண்டெண்ட்) முப்பது ஆண்டுகட்குமுன் வேலை பார்த்து வந்தார். மேற்கூறிய விடுதியிலேயே இவரும் இருந்து குழந்தைகளைத் தாய்போல உன்னித்துக் காப்பாற்றி வந்தார். அவ்விடுதியிலுள்ள பெண்களனைவரும் மிகவும் ஏழ்மைக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாதலின்

அதற்கேற்றபடி அவர்கள் உணவும் எளிமையாகவே இருந்தது. உணவுப்பண்டங்களை வாங்குவதும் வைத்துக் காப்பதும் செல விடுவதும் பாக்கியம் அம்மையாரின் பொறுப்பிலேயே இருந் தன. ஒருமுறை பண்டம் இருந்த அறையில் கள்ளர் சிலர் புகுந்து அவற்றைத் திருடிச்சென்றனர். பின்னர் இரண்டு மூன்று தடவை இப்படியே நடந்துவந்தமையால் மறுநாளைக்கு வேண்டிய உணவுப்பொருள்களை மட்டும் முன்னால் வாங்கிவைத் தனர் அம்மையார். அவற்றையும் அத் திருடர்கள் திருடிச் சென்றனர். இதனால் ஏழைக் குழந்தைகளின் உணவுக்குத் திண்டாட்டமாயிற்று. இதுகண்டு அம்மையார் பெரிதும் வருந் தினர். இத்திருட்டை ஒழிக்க அம்மையார் ஒருவழி கண்டு பிடித்தார். சில நாட்கள் தொடர்ந்து இரவெல்லாம் கண் விழித்திருந்தார். பண்டசாலையின் பக்கத்தறையிலிருந்து ஒரு நாள் இருளடர்ந்த நள்ளிரவில் பண்டசாலையின் சாளரத்தினைப் பெயர்த்தெடுத்துக் கள்வர் சிலர் உட்புகுந்து பண்டங்களை எல்லாம் எடுத்து வெளியில் வைத்துக்கொண்டிருந்தனர். இவர் களை எதிர்பார்த்து விழித்திருந்த அம்மையார் ஆண்டவனை அன்புடன் வணங்கி மனந் தேறி உறுதியுடனும் அன்புடனும் இருட்டறையி லிருந்துகொண்டே பின்வருமாறு கள்வர்களுக்கு அறிவுறுத்தலானர். "உடன்பிறப்பாளர்களே! தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். நான் ஒரு வயது சென்ற கிழவி. இவ்விடுதியில் ஆண்கள் ஒருவரும் இல்லை. சில ஏழைப் பெண் குழந்தைகளும் நானுந்தா னிருக்கின்றோம். எங்களால் உங் களைத் தடுக்க முடியாது. தாய் தந்தை இல்லாத திக்கற்ற பெண் குழந்தைகளுக்குச் சிலர் கொடுக்கும் நன்கொடையை வாங்கி இங்கே சாப்பாடு போடுகின்றோம். நீங்கள் அடிக்கடி இங்கே வந்து உணவுப் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோய் விடுகின் றீர்கள்; அதனால் குழந்தைகள் பட்டினிகிடக்க நேரிடுகின்றது. நீங்களும் வயிற்றுக்கில்லாமல் தான் இப்படிச் செய்கின்றீர்கள். உங்கள்மேல் எனக்கு வருத்தமில்லை. உங்களுக்கும் குழந்தை குட்டிகளிருக்கின்றன. அவைகள் பட்டினியாக இருக்க உங் கட்கு மனங் கேட்குமா? இங்கே இருக்கும் குழந்தைகளும் உங்கள் குழந்தைகள்தானே. அவைகள் பட்டினியாயிருப்பது உங்கட்குச் சம்மதமா? கடவுள் ஒருவர் இருந்து இதை யெல்லாம் பார்க்கின்றார். இனிமேலாவது இந்த ஏழைக் குழந்தைகளின் உணவை எடுத்துக்கொண்டு போகாமலிருக் கும்படி உங்களை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கின்றேன்," என்று மனமுருகிக் கூறினர். இதைக்கேட்ட திருடர்கள் "இனிமேல் நாங்களிங்கு வரமாட்டோம்" என்று சொல்லிப் போயினர். பொழுது விடிந்ததும் அம்மையார் பண்டசாலை

யின் வெளிப்புறத்தைப் பார்த்தார். கள்வர் கொண்டுபோக வெளியில் எடுத்துவைத்த பண்டங்கள் எல்லாம் அங்கே இருக்கக்கண்டு கடவுட்கு வணக்கங் கூறினார். அதற்குப்பின் அங்குத் திருடு நிகழவேயில்லை.

இனி, அப்பெண்கள் விடுதியில் நடந்த மற்றொரு நிகழ்ச்சியை இங்கெடுத்துக் கூறுவாம். அவ்விடுதியில் சமையல் தொழில் செய்துவந்த ஒருத்தி குழந்தைகட்கு அளவாகச் சமைக்குஞ்சோறு, கறி, குழம்புகளை மிகுதியாகத் திருடிவந்தாள். இதனால் பிள்ளைகட்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. இதுபற்றி அம்மையார் சமையற்காரிக்குப் பன்முறை அன்புடன் அப்படிச் செய்யவேண்டாமென்று புத்திமதி சொல்லிப்பார்த்தனர். இரண்டொருதடவை சமையற்காரியின் களவைக் கையுமெய்யுமாகக் கண்டுபிடித்துச் சினங்கொள்ளாமல் மீண்டும் நல்லறிவு கூறி மன்னித்தனர். எவ்வளவு சொல்லியும் மீண்டும் மீண்டுஞ் சமையற்காரி தன் திருட்டுத் தொழிலைக் கைவிட்டபாடில்லை. அம்மையும் அவளை வேலையிலிருந்து நீக்க மனங்கொள்ளவில்லை. ஒருநாள் அம்மையார்க்குச் சமையற்காரியின் திருட்டுவேலை பொறுக்கமுடியாது போகவே அவளை நோக்கி மிகச் சீற்றத்துடன், “எவ்வளவு சொல்லியுங் கேளாமல் ஏழைப் பெண்கள் சோற்றைத் திருடும் உன் கையில் பாம்பு கடிக்காதா?” என்று வயிறெரிந்து கூறினார். அடுத்தநொடியில் தம் சினத்திற்காகவும் கடுஞ்சொல்லுக்காகவும் வருந்தினார். இது நடந்து சில நாட்கள் சென்றன. அச்சமையற்காரி ஒருநாள் விடியற்காலத்தில் அடுப்புமூட்டுவதற்காகப் பழஞ்சாம்பலை அள்ள அடுப்புக்குள் கையைவிட்டாள். குளிர் தாங்காமல் வெப்பத்திற்காக அங்குப் படுத்திருந்த நச்சுப்பாம்பொன்று அவள்கையில் வெடுக்கென்று கடித்தது. அவள் குருதிவழியுங்கையுடன் அம்மையிடம் ஓடிவந்து “அம்மா! நீங்கள் சொல்லியது மெய்யாய்விட்டது, இதோ பாருங்கள்! என் கையில் பாம்பு கடித்துவிட்டது.” என்று கதறிக்கொண்டே நிகழ்ந்ததைக் கூறிப் புலம்பினாள். உடனே அம்மையார் தம் சொல்லால் இப்படி நடந்ததே என்று மனம்வருந்தி அவள் துன்பத்தைப் போக்குமாறு கடவுளைச் செபம் பண்ணினார். பாம்பின் நஞ்சாலேற்பட்ட நலிவுதீர அவளுக்கு நாட்கள் சிலவாயின. அதன்பின் அவள் விடுதியில் கள்ளத்தனம் செய்யாமலிருந்தாளென்பதைக் கூறவும் வேண்டுமோ?

திருக்குறள்—ஓர் அகப்பை

[தமிழ் மறைத்தொண்டர் வி. எம். சுவாமி]

கலைமலிந்த நந் தமிழ் நாட்டின் கருணை ஒளிதிகழ் வள்ளல்களாய் விளங்கினோர் பலருண்டு. அறிவுச் சுடர்கொள் பெருமணிகளாம் அன்னவர்களுள்ளே முன்னவராகத் தலைநின்று தமிழ்நாட்டின் உயர்புகழ் நலங்களை உலகறியச் செய்தவர் திருவள்ளுவநாயனார் ஆவர். இவர் தம் குறளறங்களின் விழுமிய கருத்துக்களைத் தழுவி அதன் வழி ஒழுகி நின்று நன்னெறியடைந்தோர் பலராவர்.

"உறங்குவது போலும் என்ற ஒண்குறளின்
வாய்மை மறங்கருதி யந்தோ மறந்தாய்."—

(அருட்பா—நெஞ்சறிவுறுத்தல்.)

என்றார் வடலூர் வள்ளலார்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."— (குறள் 339.)

என்ற குறளறத்தின் மெய்ப்பொருளினையே வாழ்க்கைக்கோர் ஊன்று கோலெனப்பற்றி நின்ற வடலூரார் தமது கருத்தினை மனமுருக எடுத்துரைத்தார். இவர்போன்று வள்ளுவரின் வாய்மையுரையினைப்பின்பற்றி நின்றோர் பலரென்பது ஒருதலை.

அந் நாளிலேயே குறளின் பெரும் சிறப்பினை வள்ளலார் அறிந்தார்; அதன்வழி நின்றார்; அரும்புகழ் கொண்டார். ஆனால் இன்னும் நம் மக்கள் அதன் சிறப்பினை யறிந்தாரில்லை. இன்றைய நாளில் நம்மவர்கள் மதிமயங்கி, நிலைகலங்கி மனம் குழம்பி நிற்பதற்குக் காரணம் தமிழ்மறைதன்னை அவர்கள் மறந்ததேயாகும். மரத்தினை யொத்த ஒருசில மக்களின் இயல்பினை விளக்கும் ஆசிரியரின் நல்லுரைகளை விரித்துக் கூறும் நற்பணி தன்னை இன்றைய கடனாகக் கொள்ளுவோம்.

மதிநுட்பமும், நூலாராய்ச்சியும், அறிவு வளர்ச்சியும் கொண்டிருந்தும் ஒரு சிலர் நற்குணமும் பெருந் தன்மையுமற்றவர்களாக இருக்கின்றனர். நற்குணம் பழகா அம்மக்களின் வாழ்க்கை பயனற்ற தென்பதே ஆசிரியரின் கருத்தாகும். கூர்ந்த மதியுள்ள மக்களும் நற்குணமில்லாதவராகி மக்களை மக்களாக மதித்தொழுகும் தன்மை பெற்றிலராகில் அவர்களும் ஓரறிவு படைத்த மரத்தினை யொப்பர் என்றார்.

“ அரம் போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். ”—

(குறள். 997.)

அறிவினைப் பெற்றிருந்தும் நற்குண மில்லாதிருப்பதால் ஓரறிவு படைத்த மரத்தினையே யொப்பர் என்று இழிவு படுத்து முறையில் அவர்பால் காணும் அறிவினையும் பயனற்றதாகவே குறிப்பிட்டார். நற்குணத்தின் பெருஞ் சிறப்பே உயர்த்திக் கூறப்பட்டது. மரத்தினைக்கொண்டு ஒரு கருத்தினை விளக்கிய ஆசிரியர் அவ்வொரு உதாரணங்கொண்டு பிற கருத்துக் களையும் சொல்லுவர்.

ஊக்கத்தினைச் சிறப்பித்துக் கூறுமிடத்து அதன் இன்றி யமையாத் தன்மையினையும் பயனையும் நன்கு விளக்கி வைத் தார். ஊக்கமில்லாதவர் வாழ்க்கையில் பயனற்றவர் என்பதே ஆசிரியரின் கருத்தாகும். அவ்வூக்கமில்லாதவர்கள் ஒருவகைத் தனிப்பட்ட மரத்தினையே யொப்பர் என்றார்.

“ உரமொருவர்க்கு உள்ள வெறுக்கை அஃதிலார்
மரமக்கள் ஆதலே வேறு. ”—

(குறள். 600.)

இங்கும் மரத்தினையே ஆசிரியர் தன் கருத்தினை விளக்கும் கருவியாகக் கொண்டார் எனினும், முன்னைய உவமையினைவிட இதன்பால் ஒரு குறிப்பான கருத்தும் அமைத்தார். ஊக்க மில்லாதார் மரத்திற்கும் தாழ்ந்தவரென்று கூறவேண்டியதே ஆசிரியரின் கருத்தாக நின்றது. மரங்களும் பழம் முதலியன தந்து பயன் கொடுத்து நிற்க, இம்மனித மரமானது ஊக்க மின்றிப் பலனொன்றும் தாராத தன்மையுடையதாதலால் புது மாதிரியான ஒருவகை மரங்கள் என்று கூற விரும்பிய ஆசிரியர் “ மரமக்களாதலே வேறு ” என்று நயமொடு கூறிச் சென்றார். உவமை யழகின் உட்கருத்து நயம் பொலிய விளங்குகின்றது.

பின்னும் மரத்தினையே பிற இடங்களிலும் நற்கருவியாக ஆசிரியர் கொள்கின்றார். அன்பில்லாதார் வாழ்க்கை மரத் திற்குச் சமமாகக் கூறப்படுகின்றது. ஆனால் இங்குக்கூறப்பட்ட மரமும் அஃது உண்டாயிருக்கின்ற இடமும் வேறு. அன்பிலார் வாழ்க்கை பயனற்றதென்பது ஒருதலை. இவ்வாழ்க்கை பாலைவனத்தில் தளிர்க்கும் பட்டுப்போன மரம் ஒன்றிற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

"அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று"— . (குறள். 78)

பாலைவனத்தில் மரம் இருத்தலே அரிது. இருப்பினும் அது தளிர்த்தல் நடவாத செயலாகும். அப்படித் தளிர்த்தாலும் பயனற்றதாகவே இருக்கும். பட்டமரம், அஃதும் பாலைவனத்தில் தளிர்க்காதென்பதை நன்கறிந்த ஆசிரியர், அதனை உவமையாக அன்பிலார் வாழ்க்கையில் பொருத்திக் கூறினர். இங்கும் ஒருவகை மரமே ஆசிரியருக்குதவி நின்றது.

பொது முறையில் மரங்களைக் கருவியாகக் கொண்ட ஆசிரியர் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டதோர் மரத்தினை எடுத்துக் கொள்ளுகின்றார். ஈகைத்தன்மை வாய்ந்து நற்குணம் பொருந்திய பெருமக்களின் சிறப்பினை இருவகை மரங்களினால் புலப்படுத்துகின்றார். ஒன்று பழுத்தமரம்; மற்றொன்று எல்லாப் பிணிகளையும் நீக்குதற்குதவும் நன்மரம்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்"— (குறள். 216)

பலரும் விரும்பிப் புசிக்கும் நற்பழங்களை எளிதில் தரக்கூடிய நன்மரம் நற்குணமுள்ள செல்வந்தனுக்கு உவமையாகக் கூறப்பட்டது. பிறர்க்குதவி நிற்கும் பெருந்தகையாளன் என்னும் பெருங்கருத்தினை ஊர் நடுவில் வளர்ந்து பழுத்த மரத்திற்குக் குறிப்பாக எடுத்துரைத்த உட்கருத்து நன்குணர்ந்து போற்றற் குரியதாகும்.

ஒருசில மரங்கள் எல்லா உறுப்புக்களினாலும் (இலை, பூ காய், கனி முதலியவைகள்) பிறர்க்குதவுவதுபோற் பேரறிஞர்களும் பிறர்க்குதவாநிற்பர், என்னும் கருத்தினை நன்கு விளக்கப்புகுந்த ஆசிரியர்,

"மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"— (குறள். 217)

என்ற குறட்பாவினால் மெய்ப்பித்தார். பெருந்தகையாளரின் செல்வம் பிணிகளுக்கு மருந்தாய் நிற்கும் மரத்திற்கு ஒப்புவமையாய் உயர்த்திச் சொல்லப்பட்டது. இன்னும் இவை போன்ற கருத்துக்களையும் மரங்களைக் கொண்டே ஆசிரியர் வற்புறுத்திக் கூறுவர்.

பெரியோர் செல்வத்தின் பெயரும்பயனைக் கூறின ஆசிரியர் அதற்குமாறாகச் சிறியோர் செல்வத்தின் இழிவினையும் கூறுவர். செல்வம் பெற்றும் நற்பயன் கொள்ளாத இழிந்தோர்

நீக்குணம் பழித்துக் கூறப்பட்டது. அவர் கெடுதியினையும் அவரால் பிறர்க்குக் கெடுதி உண்டாகும் என்பதையும் நன்கு விளக்கிவைத்தார்.

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத் தற்று"— (குறள். 1008)

நஞ்சுகொண்ட எட்டிமரம் நன்மையைத் தாராது. அதுபோன்றதே அற்பரின் செல்வமும். பலன்தராவிட்டாலும் கெடுதியினை விளைவிப்பதே அற்பரின் செல்வம் என்னும் கருத்தினையே "நடுவூரில் பழுத்த நச்சுமரம்" என்று குறித்துவைத்தார்.

நன்மரத்தையும் நச்சுமரத்தையும் விளக்கிய ஆசிரியர் பின்னர் முள் மரமொன்றினையும் எடுத்துக் காட்டுவர். காணும் பொழுதே அச்சத்தைக் கொடுக்கும் முள்மரம் பகைவர்களுக்கு உவமையாகக் கூறப்பட்டது. மரமாகாத முன்பே முட்செடியினைப் பிடுங்கியெறிதல் எளிதானதாகும். அஃதேபோன்று பகைவர்களையும் ஆரம்பத்திலேயே நீக்கமுயலுதல் வேண்டும் என்ற நல்வழி போதிக்கப்பட்டது.

"இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து"— (குறள். 879)

வளர்ந்தோங்கி, வயிரம் பாய்ந்து வலிமை பொருந்திய முள் மரம் பலம் தங்கிய பகைஞர்களுக்கு உவமையாகக் கூறப்பட்டது. கொடிய பகைவர்களை முள்மரத்திற்கு ஒப்பாகக் கூறினர். அவர்களை அழித்தொழிக்கும் காலத்தையும் குறிப்பிட்டார்.

இதேபோன்று ஆசிரியர் அறநெறிகளையும், நல் முறைகளையும் நயம்படத் திறம்பட உவமையழகு வெளிப்பட நன்கு மனதில் பதியும் எளியமுறையில் விளக்கிக் கூறும் சிறப்பியல்புகள் போற்றுதற்குரியன. சிறியதோர் பொருள்கொண்டு அறிதற்கரியனவாகிய பெருங்கருத்தின் நலன்களை நன்கு விளக்கும் ஆசிரியரின் வன்மை அளவிடற்கரிதன்றோ?

திருமந்திரம்

பாயிரம்

[துடிசைகிழார் அ. சிதம்பரனார்]

" ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே "

என்னும் சூத்திரப்படி ஒரு நூற்குப் பாயிரம் உரைப்பது நூன் முறையாகும். அம் முறைப்படி நாயனாரும் " தமிழ் மூவாயிர" த்துக்குப் பாயிரம் கூறியுள்ளார்.

மூவாயிரம் செய்யுட்களில் பாயிரச் செய்யுள்கள் சேர்ந்தனவேயாயினும், ஒன்பது தந்திரங்களுக்கும் அது போது.

நாயனார் கூறியது ஒன்பது தந்திரங்கள் தான் என்பது,

" தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே "

என்ற சிறப்புப் பாயிரப் பாசுரத்தால் விளங்கும்.

பாயிரம், போது சிறப்பு, என இருவகைப்படும்: நாயனார் கூறியது பொதுப்பாயிரம். அவர் மாணுக்கர்கள் கூறியது சிறப்புப்பாயிரம். தற்காலம் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்ற புத்தகங்களில் இவ்விரண்டினையும் வேறு பிரியாது அச்சிட்டிருக்கின்றனர். அதனல் படிக்கிறவர்களுக்கு எது நாயனார் பாடல், எது அவருடைய மாணுக்கர்களுடைய பாடல் என வேறு பிரித்து அறிவது கடினமாயிருக்கிறது. அக்குறையையும் ஒருவாறு ஈண்டு நீக்கியுள்ளேன்.

நாயனார் ஒன்பது ஆகமங்களின் கருத்தைத்தான் ஒன்பது தந்திரங்களாகப் பாடினார் என்பது

" அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே "

என்னும் பாயிரச் செய்யுளால் விளங்கும்.

ஆகமங்கள் இருபத்தெட்டு ஆயிற்றே; நாயனார் ஒன்பது ஆகமங்களைப்பற்றி மாத்திரம் ஏன் கூறவேண்டும் என்பார்க்கு, சதாசிவநாயனார் வெளியிட்டது இருபத்தெட்டு ஆகமங்கள் என்றும், அவைகளில் நந்தி என்று பேர்பெற்ற சிகண்ட உருத்திரர்க்கே ஒன்பது ஆகமங்கள்தான் கிட்டின என்றும், அவ்வொன்பது ஆகமங்களையே நந்தியெம்பெருமான் திருமூலர்

முதலிய தம்முடைய எட்டுச் சீடர்களுக்கு அருளினர் என்றும், ஆகையால், இப்பூவுலகிற்குக் கிட்டினதே ஒன்பது ஆகமங்கள் தான் என்றும், ஆதியில் கல்லால் நிழலிலும், மகேந்திர மலையிலும், திருப்புறம்பயத்திலும் ஒவ்வோர் காலங்களில் வெளியிடப்பட்ட ஆகமங்கள் எல்லாம் மறைந்துபோகவே இறைவனுடைய ஆணையால் அவ்வொன்பது ஆகமங்களின் கருத்துக்களை ஒன்பது தந்திரங்களாக நம் நாயனர் பாடி உலகர்க்கு உபகரித்து உள்ளார் என்றும் அடியில் காட்டப்பட்ட அவருடைய பாசுரங்களால் வெளியாம்.

ஆகமங்கள் இருபத்தெட்டு என்பது

"அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்"

என்பதால் அறியலாம்.

ஒன்பது ஆகமங்கள்தான் சீகண்டர் பெற்றர் என்பது

"சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மிற்றும் பெற்ற
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றனே"

என்னும் பாசுரத்தால் அறியலாம்.

அவ்வாகமங்கள் இன்னவென்பது

"பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர் சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகுங் காலோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே"

என்னும் பாசுரத்தால் விளக்கமாம்.

ஆதலின் முதற்றந்திரம் காரண ஆகமத்தின் சாரமாகவும், இரண்டாம் தந்திரம் காமிக ஆகமத்தின் சாரமாகவும், மூன்றும் தந்திரம் வீர ஆகமத்தின் சாரமாகவும், நான்காம் தந்திரம் சிந்தியாகமத்தின் சாரமாகவும், ஐந்தாம் தந்திரம் வாதுள ஆகமத்தின் சாரமாகவும், ஆறும் தந்திரம் வியாமள ஆகமத்தின் சாரமாகவும், ஏழாம் தந்திரம் காலோத்தர ஆகமத்தின் சாரமாகவும், எட்டாம் தந்திரம் சுப்பிரபேத ஆகமத்தின் சாரமாகவும், ஒன்பதாம் தந்திரம் மகுட ஆகமத்தின் சாரமாகவும் அமைந்திருப்பது விளங்கும்.

சதாசிவ மூர்த்தியானவர் இருபத்தெட்டு ஆகமங்களையும் பிரணவர் முதலிய பதின்மருக்கும், மகா உருத்திரர் முதலிய

பதினெண்மருக்கும் ஒரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச் செய்தார். இதனை,

" எஞ்சலில் விஞ்ஞகர் இருபத் தெண்மரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டனர் "

என்ற பாயிரச் செய்யுளால் அறியலாம்.

ஆனால் ஒன்பது ஆகமங்களையும் ஒருங்கே பெற்றவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களில் முதல்வராகிய சீகண்ட உருத்திரர் ஆவர். அவரைத் தான் " சிவமாம் பரத்தினில் " என்ற பாசுரத்தில் நாயனர் " நந்தி " எனக் குறிப்பிட்டு உள்ளார்.

ஒன்பது தந்திரங்களிலும் நாயனர் விளக்கியுள்ளவை எவை என்பது,

" ஞேயத்தை ஞானத்தை ஞாதுருவத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே "

என்னும் பாசுரத்தால் விளங்கும்.

நாயனர் திருமந்திரப் பாட்டுக்களைத் தமிழ் மொழியிலேயே தான் பாடினர் என்பது,

" என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே "

என்ற நாயனர் வாக்காலும்,

" மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ் "

என்ற அவர் மாணுக்கர் வாக்காலும்,

" ஒன்றவன்ருன் " என எடுத்து நாயனர் திருமந்திரத்தைத் தொடங்கினர் எனச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் கூறுமாற்ருலும் அறியலாகும்.

தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திரமானது நாயனர் மூலனுடைய உடம்பில் புகுந்த பின்னர்தான் செய்யப்பட்டது என்பது,

" அகலிடத்தார் மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தெம் மெய்யைப் போக விட்டானை "

என்ற பாசுரத்தாலும்,

" இருந்தேன் இக்காயத்தில் எண்ணிலிகோடி "

என்ற பாசுரத்தாலும் அறியலாம்.

தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திர நூலைத் திருவாவடு துறையில் அரசமரத்தின் அடியில் தவமிருந்து கொண்டு படித்து முடித்துத் தம்முடைய ஏழு சீடர்களுக்கும் நாயனார் புகட்டி வந்தார் என்பது,

" சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனை
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண் டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியி னீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே "

என்ற பாசுரத்தாலும்,

" மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனொடு
இந்த எழுவரும் என்வழி யாமே "

என்ற பாசுரத்தாலும் அறியலாம்.

" இருந்த அக் காரணங் கேள் இந்திரனே "

என்ற பாயிரச் செய்யுளில் இந்திரனை முன்னிலைப் படுத்தியும்,

" மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம் "

என்ற பாயிரச் செய்யுளில் மாலாங்கனை முன்னிலைப் படுத்தியும்,

" நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடுங் காலாங்கி கஞ்சன் மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்து "

என்ற பாசுரத்தில் காலாங்கியையும் கந்துருவையும் முன்னிலைப் படுத்தியும் நாயனார் கூறுவதால், மேலே " மந்திரம் பெற்ற வழிமுறை" என்ற பாசுரத்தில் கூறிய ஏழு சீடர்களில் நால்வர் சம காலத்தவர்கள் என்றும், அவர்கள் எல்லாம் நாயனாருடன் உடன் உறைந்தவர்கள் என்றும் அறிகிறோம்.

"ஓர்ந்திடுங் கந்துரு" எனத் தனிப்படுத்திக் கூறியுள்ளதால் கந்துரு என்பதே தனிப்பட்ட ஒரு சீடர் பெயர் என்றும், " ஆய்ந்திடும் காலாங்கி கஞ்சன் மலையமான்" என்றதால் அவை மூன்று சொற்களும் ஒரு சீடரையே குறிக்கும் என்றும் அறிகிறோம். எழுவரில் நால்வர் போக மீதியுள்ள சோமன் —பிரமன்—உருத்திரன்—என்பார் இந்நால்வருக்கும் சற்று முந்தியவர் ஆவார்.

ஆகமங்கள் ஒன்பதுதான் என்றும், பின் அவ்வொன்பது ஆகமங்களையும் 28 ஆகமங்களாகப் பிரித்துத் தனித்தனிப் பெயர்கள் கொடுத்து, ஒவ்வொரு ஆகமத்தையும் கரும

காண்டம், ஞானகாண்டம், உபாசனகாண்டம் என மூன்று பிரிவுகளாகச் செய்தார்கள் என்றும், அவைகளே இப்போது சைவ உலகில் வழங்கிவருகின்றன என்றும், ஆதலின் மூலாகமங்கள் ஒன்பதே ஆகும் என்றும் நாயனார்

" ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழும்
மோகமில் நாலேழும் முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த முத்தாந்த மெய்ம்மை யொன்(று)
ஆக முடிந்த அருஞ்சுத்த சைவமே "

என்ற பாசுரத்தால் விளக்கியுள்ளார்.

நாயனார் மூவாயிரம் ஆண்டு தவமிருந்து வருடத்திற்கு ஒரு பாட்டாகப் பாடினார் என்பது எப்படி என்பார்க்கு,

" ஈராறு கால் கொண்டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுணர வல்லிரேல்
நீராயிரமும் நிலமாயிரத் தாண்டும்
பேராது காயம் பிரானந்தி யாணையே "

" உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே "

" மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிழ் முட்டை இரண்டையுங் கட்டியிட்
டூன்றி யிருக்க உடல் அழியாதே "

என்ற பாசுரங்களினால் உடல் அழியாமல் இருக்கும் வழியைத் தான் தெரிந்து உடம்பை அழியாமல் காப்பாற்றினதாகவும், ஏனையோர்களும் அப்படிச் செய்தால் உடல் அழியாது என்றும் கூறுவதை நோக்க விளங்கும். ஆகையால், நாயனார் மூவாயிர ஆண்டும் அதற்கு மேலும் இருந்ததைப்பற்றி யாரும் சந்தேகம் கொள்ள நியாயம் இல்லை.

நாயனார் நந்தியெம்பெருமான் மாணவர் என்பது

நாயனார் நந்தி என்று சொல்லப்படுகின்ற சீகண்டருடைய எட்டு மாணவர்களில் ஒருவர். இதனை,

" நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே "

என்ற பாசுரத்தால் அறியலாம்.

ஆதலின், சனகர்-சனந்தனர்-சனாதனர்-சனற்குமாரர்-சிவயோகமாமுனி-பதஞ்சலி-வியாக்கிரமர்-திருமூலர் ஆகிய எண்மரும் நந்தி அருள் பெற்ற **நாதர்** ஆவார்கள்.

நாதர் தத்திதாந்த நாமம். நாதர் என்ற மொழிக்கு '**நந்தி அருள்பெற்றவர்**' என்பது பொருள்.

இவ்வெண்மரும் தாங்கள் கேட்ட உண்மையை உலகில் மடங்கள் தாபித்துச் சீடர்களைச் சேர்த்து பக்குவ ஆன்மாக்களிடத்துப் பரப்பி வந்தார்கள்.

சனற்குமாரருடைய சீடர் சத்தியஞான தரிசிகள் ஆவர். அவருடைய சீடர் பரஞ்சோதி முனிவர். அவர் சீடர் மெய்கண்டார். அவருடைய பரம்பரையில் ஏற்பட்ட மடங்கள் தான் திருவாவடுதுறை, தருமபுரம் முதலியவை.

பதஞ்சலி-வியாக்கிரமர் இருவரும் வடதேசத்தில் மடங்கள் தாபித்தது போலவே சிதம்பரத்திலும் தாபித்து தங்கொள்கைகளைப் பரப்பி வந்ததோடு சிதம்பரத்திலேயே நடன தரிசனம் செய்து சிவத்துடன் கலந்தார் என்று அறிகிறோம்.

சிவயோகமாமுனி என்றாலும் **சிவமுனிசித்தசன்** என்றாலும் ஒன்றே. அவரும் தென்னாட்டில் பல சித்தர்களுக்குப் போதித்துப் பல மடங்கள் தாபித்துள்ளார்.

திருமூலரும் திருஆவடுதுறையில் அமர்ந்து, 'மூவாயிரந் தமிழ்' என்ற திருமந்திர நூலைச் செய்து முடித்து, தம்முடைய ஏழு சீடர்களுக்கும் போதித்து, அவர்கள் மூலமாக ஆகமங்களின் கருத்துக்களை உலகில் பரவச் செய்தார். அவ்வேழு சீடர்களும் ஏழு மடங்கள் தாபித்து தம்முடைய சீடர்களுக்குப் போதித்து வந்தார்கள்.

காலாங்கர் என்பதும், காலாங்கி கஞ்சமலையன் என்பதும், காலாங்கிகஞ்சன் மலையமான் என்பதும் ஒருவரையேகுறிக்கும்.

காலாங்கர் என்பவர் மலை மன்னர் என்று சொல்லப்படும் உடையார் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், அவர் கஞ்சமலை என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்றும், அவரைக் கஞ்சமலைச் சித்தர் என்று சொல்லுவதும் உண்டென்றும் அறிகிறோம். கஞ்சமலை என்னும் ஊரை இப்போது **சித்தர்கோயில்** என்று வழங்குகிறார்கள்.

நாயனார் தம் திருமந்திர நூலை ஏழு சீடர்களுக்கும் ஒரே தடவையாகக் கூறவில்லையென்றும், இரண்டு தடவையில் கூறினார் என்றும், முதல் தடவையில் சோமன்—பிரமன்—உருத்

திரன் ஆகிய மூவர்க்கும், இரண்டாந் தடவையில் ஏனைய நால்வர்க்கும் கூறினார் என்றும்,

"மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்"

என்னும் பாசுரத்தால் அறிகிறோம்.

நாயனார் முதலில் கூறிய ஐங்கரன் வாழ்த்தும், கடையில் கூறிய "வாழ்கவே வாழ்க" என்னும் வாழ்த்துச் செய்யுளும் நூலில் சேரா.

"ஒன்றவன்றானே" என்ற செய்யுள் முதற்கொண்டு கூறிய பரசிவப்பெருமை 50 செய்யுட்களும்; மும்மூர்த்திகளின் முறைமை 10 செய்யுட்களும்; வேதச் சிறப்பு—7; ஆகமச் சிறப்பு—7; அந்தணர் ஒழுக்கம்—10; அக்கினி காரியம்—10; அரசனது ஆட்சி முறைமை—10; வான் சிறப்பு—2; அறம் செய்வான் திறம்—10; அறம் செயான் திறம்—10; அவையடக்கம்—2 ஆகச் செய்யுட்கள் 68-ம் மொத்தச் செய்யுட்கள் 128-ம் பாயிரமாகும். இப்பாயிரத்தில் தொல்காப்பியப்படி அறுவகை வாழ்த்தும் அடங்கியுள்ள தன்மை கண்டு கொள்க.

குரு பாரம்பரியம்—நாயனார் தம் வரலாறு கூறல் முதலியன நாயனார் தம் சீடர்களுக்கு வரன்முறை தெரியவேண்டிக் கூறியன ஆதலால் நூலிற் சேரா.

குருமட வரலாறு—திருமந்திரத் தொகைச் சிறப்பு முதலியன மாணாக்கர்கள் ஓதிய வாதலால் நூலில் சேரா.

இவை யிரண்டினையும் நூலுக்குத் தற்சிறப்புப் பாயிரமாகவும் சிறப்புப் பாயிரமாகவும் கொள்ளுதல் பொருத்தம்.

அக்காலத்திய இலக்கண நூன்முறைப்படி அறுவகை வாழ்த்துக்களும் பாயிரத்தில் அடங்கும்.

சில படிகளில் பாயிரத்தில் இருக்கவேண்டிய அந்தணர் ஒழுக்கம்—அக்கினி காரியம்—அறம் செய்வான் திறம்—அறம் செயான் திறம்—அரசனது ஆட்சி முறைமை—வான் சிறப்பு முதலியன முதற் றந்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை ஓலைச் சுவடிகள் கோப்பார் கைப்பிசகு ஆகும்.

ஆதலின், பாயிரச் செய்யுள்களுக்கு உரை எழுதுவதன் முன்னம் பாயிரம் இன்னது என்றும், அதில் கூறப்பட்ட அறுவகை வாழ்த்துச் செய்யுள்கள் இன்னவை யென்றும் தெரிந்து கொள்ள வேண்டியிருத்தலால் அவைகளைப்பற்றி ஈண்டு விரிவாக எழுத நேர்ந்தது.

ஆகம நூலைத் தமிழ் உலகுக்குப் பாடி உபசரிக்க வந்தவர் ஆனதால் நாயனார் நூன்முறைப்படி பாயிரமுரைத்து நூலைத் தொடங்கியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

புதைந்த நகரங்கள்*

(கி. மு. 3252—கி. மு. 2750)

[வித்வான் மா. இராசமாணிக்கம், B O. L.]

பஞ்சாப் மாகாணத்தில் லாஹூர், மூல்டான் என்னும் இடங்கட்கு இடையே தோண்டி எடுக்கப்பட்ட நகரம் 'ஹரப்பா' என்பது. சிந்து மாகாணத்தில்—லர்க்காணு ஜில்லாவில் புதைந்து கிடந்த நகரம் 'மோஹெஞ்சோ—தாரோ' என்பது. இவ்விரு நகரங்களும் அமைந்துள்ள இடம் ஒரு காலத்தில் செழிப்புற்ற சிந்துநதி பாயப்பெற்ற இடமாக இருந்தது. அப்பகுதியில் அக்காலத்தில் மழை மிகுதியாக இருந்திருத்தல் வேண்டும் என்பது, இருநகரங்களிலும் காணப்படும் பெரிய கழிநீர்ப் பாதையால் விளக்கமாகிறது. சிந்து நதியுடன் கி. பி. 14-ம் நூற்றாண்டு வரை 'மஹாமிஹ்ரான்' என்னும் யாறும் அப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்தது இவ்விரண்டுடன் சிந்துவின் உபநதிகளும் சேர்ந்து பாய்ந்த நீர்வளப்பம் இவ்விரு நகரங்களையும் உயர் நாகரிகத்தில் உய்த்ததெனல் மிகையாகாது. வெள்ளப் பிரதேசமாதலின் அப்பகுதியில் கட்டப்பட்ட கட்டிடங்கள் வன்மையுடையனவாகவும் மேற்கூரை உயர்ந்தவையாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

மொஹெஞ்செ—தாரோ நகரம் உள்ள இடம் (70 அடி முதல் 20 அடி வரை) மண்ணால் மூடப்பட்டிருந்தது. ஏழு அடுக்குகள் தோண்டி எடுக்கப்பட்டன. அடிமுதல் மூன்று அடுக்குகள் பழையன; இடைப்பட்ட மூன்று இடைக்காலத்தன; மேலுள்ள 7-ம் அடுக்குப் பிற்பட்டகாலத்தது. இவற்றுக்கும் கீழே சுமார் 40 அடி ஆழத்தில் சில அடுக்குகள் காணப்படுகின்றன. அவை பின்னும் பழையனவாக இருக்கக்கூடும் என்பர் ஆராய்ச்சியாளர். முதலில் எடுக்கப்பட்ட ஏழு அடுக்குகளும் உயரிய நாகரிகத்தை வெளிப்படுத்துகின்றன என்பது அறியத்தக்கது.

---

*இக்கட்டுரை,

(1) 'Religion of Mohenjo—daro and Harappa'—in the 'Indus Civilization' Vol. I.
(2) 'Hindu Civilization' by Prof. R. K. Mookerji.
(3) 'Aryanisation of India' by Prof. N. K. Dutt.
(4) Articles in the 'New Review' by Father Heras (1936).

இவற்றின் துணையைக்கொண்டு எழுதப்பெற்றது.

கட்டிடங்கள் :—கட்டிடங்கள் பல வகைப்பட்டவை. இரண்டு அறைகளைக்கொண்ட வீடுகள் முதல் பெரிய மாளிகை ஈறாக காணப்படுகின்றன. மாளிகையின் முன்புறவெளி 85 அடி; 97 அடி பின்புறம்; பெரிய கூடம், செங்கல் பதித்த மேன்மாடம், மேலிருந்து கழிநீர் இறங்கச் சிறிய வழிகள், கழிநீரைத் தேக்கிக்கொள்ள ஆங்காங்குப் பெரிய சால்கள், சுற்றிலும் அறைகளைக்கொண்ட 32 சதுர அடியுள்ள வீட்டு முற்றம் முதலியன ஒவ்வொரு மாளிகையிலும் காணலாம். பல பெரிய கட்டிடங்களும் காணப்படுகின்றன. அவை கோயில்களாக இருந்திருக்கலாம் என்பர் ஆராய்ச்சியாளர்.

இவற்றினும் கவனிக்கத் தக்கது '**பெரிய நீராடுகுட்டை**' ஆகும். நாற்புறமும் படிக்கட்டுகள்; நாற்புறமும் அறைகள்; 39 அடி நீளம், 23 அடி அகலம், 8 அடி ஆழம் உள்ள நீராடும் இடம்; நாற்புறமும் நீர்நிலைக்கு—நீர் உதவும் கிணறுகள். இக்குட்டைக்கு, 'மேல் மூடி' மரத்தால் ஆயது. இந்நீராடு குட்டையைக் கட்டியவர் சிறந்த விற்பன்னராக (Engineers) இருத்தல் வேண்டும் எனக் கூறி வியக்கின்றனர் ஆராய்ச்சியாளர். இக்குட்டையைச் சுற்றியுள்ள சுவர் 4 அடி கனமுள்ளது. அதைச் சுற்றிலும் வேறொரு சுவரும் உண்டு. அஃது, இங்ஙனம் தக்க முறையில் கட்டப்பட்டதாற்றான் 5000 ஆண்டுகள் ஆகியும் இன்றும் நன்னிலையில் இருக்கின்றது.

பயிர், உணவு :—இப்பெரிய நகரங்களில் வாழ்ந்த மக்கள் கோதுமை, பார்லி இவற்றைப் பயிரிட்டவர் என்பது தெரிகிறது; இப்போழ்தைய இயந்திரம் (எந்திரம்) இன்றி வேறொரு கற்கருவியால் கோதுமையையும் பார்லியையும் அரைத்து வந்தனர்; மாட்டு இறைச்சி, ஆட்டு இறைச்சி, பன்றி இறைச்சி, பறவைகளின் இறைச்சி, ஆமை இறைச்சி, மீன் இவற்றை உண்டுவந்தனர் என்பதற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன **விலங்குகள்** :—எருது, எருமை, ஆடு, யானை, ஒட்டகம், பன்றி, கோழி, நாய், குதிரை இவற்றை வளர்த்து வந்தனர். (இந்நகரங்களில் கீரி, கறுப்பு எலி, மான், பைசன், காண்டாமிருகம், புலி, குரங்கு, கரடி, முயல் முதலியவற்றின் எலும்புகளும் அகப்பட்டுள்ளன.)

கனிப்பொருள்கள் :—பொன், வெள்ளி, செம்பு, தகரம், ஈயம் (இரும்பு இல்லை) இவற்றை அப்பண்டை மக்கள் பயன்படுத்தி வந்தனர். பொன், வெள்ளி கலந்ததாக இருத்தலின் அப்பொன் **கோலார், அனந்தபூர்** இவ்விடங்களிலிருந்து வந்திருத்தல் வேண்டும் என்பர் ஆராய்ச்சியாளர். நகைகட்கே

பொன் பயன்பட்டது. செம்பு ஈயத்தோடு கலந்திருத்தலின் அது இராஜபுதனம், பலுசிஸ்தான் அல்லது பாரசீகம் ஆகிய இடங்களிலிருந்து வந்திருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. செம்பு — வளையல், கத்தி, ஈட்டி, உடைவாள் முதலியன செய்யப் பயன்பட்டது. வெள்ளீயம் (தகரம்) செம்போடு கலந்து பித்தளையாகிப் பல வற்றுக்குப் பயன்படுவது. அடித்தட்டில் கிடைத்ததால், தகரம் கி. மு. 3000-க்கு முன்னரே இந்தியாவில் பயன்பட்ட தென்பது ஒருதலை. இத்தகரம் அல்லது பித்தளை, இப்புதைந்த நகரங்களிற் காணப்படலால், 'இந்தியாவில் பித்தளைக் காலம் இல்லை' எனக்கூறி வந்தது பொய்த்துவிட்டது.

கற்கள் :—பலவகைப்பட்ட கற்கள் கட்டிடங்கட்குப் பயன் பட்டன: 'சுக்கூர்' சுண்ணும்புக் கற்கள் கழிநீர்ப்பாதையை மூடப் பயன்பட்டன. 'கீர்தர்' மலைக்கற்கள் பாத்திரங்கள், சிமெண்ட், சிலைகள் இவற்றுக்குப் பயன்பட்டன. வேறு கற்கள் நிறை முதலியவற்றுக்குப் பயன்பட்டன. ஒருவகை மஞ்சட்கல் (Jaisalmir stone) லிங்கம், யோனி முதலியவற்றுக் குப் பயன்பட்டன. பல உயர்தரக் கற்கள் அணிகட்கும் பிறவற்றுக்கும் பயன்பட்டன. அழகிய பச்சை 'அமெஜான் கல்' என்பது நீலகிரியில் உள்ள 'தொட்ட பெட்டா'விலிருந்து கொண்டுவரப்பட்டது (இந்தியாவில் இக்கல் உள்ள இடம் இஃது ஒன்றே). எலும்பு, தந்தம், சங்கு முதலியவையும் பயன்பட்டன.

பஞ்சு :—மொஹெஞ்சொ-தாரோவில் உள்ள வீடுகளில் எல்லாம் நெய்தற்றொழில் நடந்துவந்தது என்பதற்கு உரிய அடையாளப் பொருள் காணப்படுகின்றன. கம்பளியும் பஞ்சுமே நெய்யப்பட்டு வந்தவை. அங்கு அகப்பட்ட பஞ்சு, இப்போதைய இந்தியப் பஞ்சுபோன்றே இருக்கிறது. இப் பழைய பஞ்சே பாபிலோனியர்க்குச் 'சிந்து' ஆகவும், கிரேக்கருக்குச் 'சின்டன்' (Sindon) ஆகவும் தெரிந்திருந்தது. இப்பஞ்சு பருத்திச் செடியினதே அன்றி இலவம் பஞ்சு அன்று! அன்று!

மயிர் முடிப்பு :—அக்கால உடைகளுள் நீண்ட 'போர்வை'யும் அடங்கி யிருந்தது. இவ்வுண்மை, அங்கு அகப்பட்டுள்ள சிலைகள்மீதுள்ள போர்வை வேலைப்பாட்டால் நன்கறியலாம். அக்கால மக்கள் சிறிய தாடியும் மீசையும் வைத்திருந்தனர்; சிலர் மீசையின்றித் தாடிமட்டுமே வைத்தும் இருந்தனர். இப்பழக்கம் சுமேரியர் பழக்கமாகும். தலைமயிர் பின்னல் முடி

யிடப்பட்டது. பெண்கள், மயிரைச் சுற்றிலும் சுருட்டி இடப் பக்கம் கொண்டைபோல் போட்டிருந்தனர். அங்கு அகப் பட்ட மூன்று பித்தளைப் பெண் உருவங்கள் இவ்வாறே தலைமுடி உடையவாயுள.

அணிகள் :—கழுத்தணி, கங்கணம், மோதிரம், காப்பு, ஒட்டியாணம், காதணி முதலியன அக்கால மக்கள் பயன் படுத்தியவை. இவற்றைப் பணக்காரர்—பொன், வெள்ளி, தந்தம், உயர் கற்கள் இவற்றால் செய்துவந்தனர் ; ஏழைகள்—சங்கு, பித்தளை, செம்பு, ஒருவகைக் கல் இவற்றால் செய்து வந்தனர்.

கருவிகள் :—போர்க் கருவிகள் கல்லாலும் பித்தளை அல்லது செம்பாலும் செய்யப்பட்டவை. கோடரி, இரம்பம், சிரைக்கும் கத்தி முதலியவை செம்பாலும் பித்தளையாலும் செய்யப்பட்டவை. கல்லால் ஆய தட்டுகள், பாத்திரங்கள் முதலியன, மொஹெஞ்சொ—தாரோவில் வாழ்ந்த மக்கள் காலம்—'மாக்கல் காலம்' என்று நினைக்கவே இடந்தருகின் றன. போர்க் கருவிகள் இருந்த நிலையை நோக்குகையில், அக் கால மக்கள் எதிர்ப்பை நோக்கி வாழ்ந்தவராகத் தெரியவில்லை.

நிறைகள் :—சிறியவை கற்பலகையால் ஆனவை ; முச் சதுர உருவில் அமைந்தவை. பெரியவை சர்க்கரைப் பொட்லம் போன்ற உருவில் அமைந்தவை. இவை 'ஏலம், மெசபொட் டோமியா' முதலிய இடங்களில் அகப்பட்ட நிறைகளைவிட நிறையில் சரியானவை ; பின்ன அளவையும் குறிக்கத் தக்கவை : 1, 2, 4, 8, 16, 32, 64, 160, 200, 320, 640, 1600 வரை பின்ன அளவை உடையன.

பாத்திரங்கள் :—வீட்டுக்கு உரிய பாத்திரங்களுள் பெரும் பாலன மட்பாண்டங்களே. கோப்பைகள் மிகுதியாகப் பயன் பட்டன ; நீர்ச் சாடிகளும் அங்ஙனமே. மட்பாண்டங்கள் சக்கரத்தின் உதவிகொண்டு செய்யப்பட்டவை ; கருமை, செம்மை நிறங்கள் கொண்டவை. 'இப்பாண்டங்களே உலகில் மிகப் பழமையானவை' என்பர் ஆராய்ச்சியாளர்.

பொம்மைகள் :—களிமண் பொம்மைகள் பெருவாரியாகக் காணப்பட்டன ; எலிகள், ஊதுகுழல், (பறவைகள் உருவில்) மனித உருவங்கள், பறவைகள், வண்டிகள் முதலியன. இவ் வண்டிகள் 'ஊர்' (Ur) நகரத்தில் (கி. மு. 3200) அகப்பட்ட—கல்லில் செதுக்கப்பட்ட தேரைப்போல இருத்தல் கவனிக்கத் தக்கது.

எழுத்துக் குறிகள்:—சிந்துப் பிரதேச மக்கள் எழுதக் கற்றவர். அவர்தம் எழுத்துக்கள் சித்திரக் குறிகள். அக் குறிகள் பழைய எலமைட், பழைய சுமேரிய, ஈஜிப்டிய எழுத்துக்களைப் போன்றவையே. அவற்றின் 396 குறிகள் அகப்பட்டுள்ளன. அவை பாத்திரங்களின்மீதும், காப்புகளின் மீதும், முத்திரைகளின்மீதும் பிறவற்றின்மீதும் காணப்படுகின்றன. எழுத்துக்கள் சேர்ந்தும் காணப்படுகின்றன. அவை வலப்புறமிருந்து இடப்புறம் நோக்கி எழுதப்பட்டுள்ளன. அவை சித்திர சங்கேதக் குறிகளே தவிர எழுத்துக்கள் அல்ல என்பர் ஆராய்ச்சியாளர் சிலர்.

சிலைகள்:—இச்சிந்துப் பிரதேச மக்கள் சிற்பத்திறமை ஓரளவு வாய்ந்தவர்கள்: இதைத் திமில்கொண்ட எருது, எருமை, பைசன் முதலியவை தீட்டப்பெற்ற முத்திரைகளைக் கொண்டும், வேட்டை நாய், செம்மறியாடு, அணில், குரங்கு இவற்றின் பொம்மைகளைக் கொண்டும் அறியலாம். கற்சிலைகள் மூன்றில், ஒன்று யோகியின் உருவத்தில் அமைந்துள்ளது. யோகியின்பார்வை மூக்கின் நுனிமீது படிந்துள்ளது. இரண்டாவது, தலைமட்டுமே உள்ள சிலை: அது எழும்பிய கன்ன எலும்புகள், பெரிய மெல்லிய உதடுகொண்ட வாய், அகன்ற விகாரமான காதுகள் முதலியவற்றை உடையது. மூன்றாவது சிலை—போர்வை போர்த்து அமர்ந்துள்ள உருவம். இவற்றோடு நடனமாது ஒருத்தியின் சிலையும் காணப்படுகிறது. அச் சிலையின் கால்கள் மிக்க நீண்டவையாய் இசைக்கு ஏற்பத் தாளம் போடும் நிலையில் அமைந்துள்ளன. கைகளும் மிக்க நீளமானவை. ஹரப்பாவில் காணப்பட்ட சிலைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று சிவந்த கல்லில் செய்யப்பட்டது: தடித்த மனித உருவைக் காட்டுவது. மற்றொன்று பழுப்பு நிறம் அமைந்த கற்பலகையால் ஆயது: இடதுகால் தூக்கியும் வலதுகால் மீதுநின்றும் நடனம் ஆடுவதுபோல அவ்வுருவம் (ஆண்) அமைந்துள்ளது. இது 'சிவ—நடராஜர்'து பழைய உருவம் என்பர் ஆராய்ச்சியாளர்; இச்சிலைகளில் அமைந்த வேலைப்பாடு கிரேக்கருடையது என்பர்.

நெறி (மதம்):—பெருவாரியான பெண்உருவங்கள் (terra—cotta—வில்செய்யப் பட்டவை) பலுசிஸ்தானத்திலும் சிந்துப் பிரதேசத்திலும் கிடைத்துள்ளன. இவை போன்றவை பல மேற்கு ஆசிய நாடுகளில் (ஏலம், மெசபொட்டோமியா, சிரியா, பாலஸ்தீனம், டிரான்ஸ்கஸ்பியா, சிறிய ஆசியா, சைப்ரஸ், க்ரீட், சைக்லேட்ஸ், பால்கன் நாடுகள், ஈஜிப்ட்)

கிடைத்துள்ளன. இவை தாயின் (இயற்கைத்தாயின்) உருவச் சிலைகள் என்பதை ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொண்டுள்ளனர். ஹரப்பாவில் கிடைத்துள்ள முத்திரை ஒன்றில் தாயின் வயிற்றிலிருந்து ஒரு செடி தோன்றுகிறது; ஒருவன் கத்தியை வைத்துக்கொண்டு நிற்கின்றான்; பெண் ஒருத்தி தூக்கிய கைகளோடு (பலியிடப்படுபவள் போலும்) நின்று கொண்டு இருக்கிறாள்.

சிவ வணக்கம்:—வேறொரு முத்திரையில் முக்கண்களையும் மூன்று முகங்களையும் உடைய சிவன் உருவம் யோகத்தில் இருப்பதுபோல் காணப்படுகிறது. அவ்வுருவினைச் சுற்றிலும் யானை, புலி, காண்டாமிருகம் முதலிய விலங்குகள் முத்திரையில் செதுக்கப்பட்டுள்ளன. ஆசனத்தின்கீழ் இரு கொம்புள்ள மான் நிற்கிறது. 'இவற்றை நோக்குகையில், சிவன்—பசுபதி (விலங்குகளின் தலைவன்) என்பது குறிக்கவே இம்முத்திரை பயன்படுகிறது' என்பர் ஆராய்ச்சியாளர்; சிவனது தலையில் இரண்டு கொம்புகள் இருக்கின்றன. அவை சைவர்தம் திரிசூலத்தைக் குறிப்பனவாக இருக்கலாம் என்பர். மொஹெஞ்சோ—தாரோவில் உள்ள வேறொரு முத்திரையில் 'யோகி' உருவத்தின் முன் 'நாகன்' ஒருவன் பிரார்த்தனை புரிவதாகக் காணப்படுகிறது. வேறொன்றில் அதே யோகி (ஒரே தலையுடன்) தனியாக இருப்பதாக உள்ளது.

சிந்துப்பிரதேச குறியீடுகளில் காணப்படும் நான்கு கைகளையுடைய சித்திரங்கள் பிற்கால இந்துக் கடவுளராய (நாற்கைகளையுடைய) பிரமன், விஷ்ணு, சிவனைக் குறிப்பனவாகலாம் என்பர் R. P. சண்டா என்னும் பேராசிரியர். அவரே "நிற்கின்ற நிலையில் ஆறு உருவங்கள் சில முத்திரைகளில் காணப்படுகின்றன. அவை சமணயோகிகளைப் போல உள்ளன. 'மட்ரா' கண்காட்சிச் சாலையில் உள்ள கி. பி. 2-ம் நூற்றாண்டினதாகவுள்ள ரிஷபதேவர் சிலையில் உள்ளவாறே மேற்கூறியவை காணப்படுகின்றன. நின்றுயோகத்தில் இருப்பது சமண யோகிகட்கே சிறப்பானது. 'ரிஷபம்'—எருது; இது சமணரது அடையாளக் குறி. சில முத்திரைகளில், யோகிக்கு முன்பு தரையில் எருது இருப்பதாக உள்ளது வியக்கத்தக்கது. எனவே, இவ்வுருவங்கள் ரிஷபதேவரைக் குறிப்பனவாக இருக்கக் கூடுமோ?" என்று ஐயுறுகின்றனர். அங்ஙனம் இருத்தல் கூடுமாயின், **சைவத்துடன் சமணமும் மிக்க பழமை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்** என்பது அவர்தம் கருத்தாகும். வேறு சிலர் எருதும் தேவரும் சைவத்தையே குறிப்பன என்பர்.

லிங்க—யோனி வழிபாடு :—"முற்கூறிய சிவ—சக்தி வழிபாட்டைத் தவிர, லிங்க—யோனி வணக்கமும் இருந்ததாகத் தெரிகிறது. சிந்துப்பிரதேசத்திலும் பலுசிஸ்தானத்திலும் இவை கிடைத்துள்ளன. இவை அவற்றைக் குறிப்பனவே என்பதை அவற்றைக் கண்ணுறுவோர் நன்கறியக்கூடும். ஹரப்பாவிலும் மோஹெஞ்சொ—தாரோவிலும் கிடைத்துள்ளவற்றுள் சிறிய அளவின, திருஷ்டி தோஷாதிகளும் பேய்—பிசாசுகளின் சேட்டைகளும் தாக்காதிருக்கும் பொருட்டு அணியப்பட்டு வந்தன. பெரியவை வழிபாட்டுக்கு உரியனவாக இருந்தன" (R. K. Mookerji's 'Hindu civilisation', p. 21).

மர வணக்கம் :—பண்டை மக்கள் மரங்களையும் அவற்றில் உறைவதாகக் கருதப்பட்ட தேவதைகளையும் வழிபட்டு வந்தனர் என்பது ஹரப்பாவில் அகப்பட்ட சில முத்திரைகளிலிருந்து தெரிகிறது (இப்பழக்கம் தமிழகத்தில் இன்றும் பெரு வழக்குடையதாகும்). மோஹெஞ்சொ—தாரோவில் கிடைத்த ஒரு முத்திரையில் அரசமரக் கிளைகள் இரண்டிக்கு இடையில் நிர்வாண உருவத்தில் நிற்பதாகப் பெண் தெய்வம் ஒன்று காணப்படுகிறது. அதனை, நீண்ட கூந்தலையுடைய ஏழு பெண்கள் வழிபடுவதாகத் தெரிகிறது. வேறொரு பெண் உருவம் பாதி குனிந்து வழிபடுவதாக உள்ளது. அவ்வுருவத்தின் பக்கத்தில் மனித முகத்துடன் பாதி உருவம் எருதாகவும் பாதி ஆடாகவும் உள்ள விலங்கொன்று காணப்படுகிறது. அது மரதேவதையின் வாகனமோ யாதோ அறியக்கூடவில்லை. ஹரப்பாவில் கிடைத்துள்ள வேறு இரண்டொன்றிலும் இத்தகைய பெண் தெய்வமும் நூதன விலங்கும் காணப்படுகின்றன.

விலங்கு வணக்கம் :—இது சிந்துப் பிரதேச மக்களிடம் இருந்ததென்பது வெளிப்படை: மனித முகம், பாதி எருதுவுருவம், பாதி ஆடு அல்லது யானை வுருவம்; பாதி மனிதவுருவம், பாதி வேறு உருவம்; இந்நூதன விலங்கு கொம்பு முளைத்த புலியோடு போரிடல் மாதிரி முத்திரைகளில் காணப்படுகிறது. சில முத்திரைகளில் தெய்வங்கட்கும் நாகங்கட்கும் கொம்புகள் இருப்பதாகக் காணப்படுகின்றன. கொம்புள்ள விலங்குகள் சில வழிபாடு பெறுவது சில முத்திரைகளால் தெரிகிறது. எருது, எருமை, காண்டாமிருகம், குட்டைக் கொம்புள்ள எருது, புலி, யானை,—இவை வழிபாடு பெற்றன என்பதும் சில முத்திரைகளால் வெளியாகிறது. இங்ஙனமே பல பறவைகள், வேறு விலங்குகள் முதலியனவும் காணப்படுகின்றன. (இன்னும் விலங்குகளுள் சிலவும் பறவைகளுள்

சிலவும் இந்துக்களால் தூயவையாகக் கருதப்படுகின்றமை இங்கு நினைத்தற்குரியது; மயில், கருடன், எருது, ஆடு, பசு, யானை, எருமை, அன்னம், சிங்கம், சேவல், பன்றி முதலியன வழிபாட்டுக்கு உரியனவாக உள்ளன அல்லவா?).

சுருங்கக் கூறின், சிந்துப் பிரதேச மக்களது மதம்—சக்தி (தாய்) வணக்கத்தையுடையது; சிவ வழிபாட்டை உடையது; யோகத்தில் பற்றுடையது; விலங்கு வணக்கத்தை உடையது; மர வணக்கத்தையும் மரம்வாழ் தெய்வ வணக்கத்தையும் உடையது; கற்சிலைகளாலாய லிங்க—யோனி வணக்கத்தை உடையது; தூப—தீப வழிபாடு உடையது; திருஷ்டி—தோஷாதிகளிலும் பேய்—பிசாசுகள் தாக்குதலிலும் நம்பிக்கை உடையது. இவற்றுள் பெரும்பாலன இந்தியாவுக்கே சிறப்பாக உடையவை.

இடுதலும் சுடுதலும் :—இம்மதத்தைப் பின்பற்றி வந்த பண்டை மக்கள் இறந்தார் உடலை எரித்து வந்தனர்; எரித்துச் சாம்பலையும் எலும்புகளையும் பெரிய மட்பாத்திரங்களில் (தாழிகளில்) இட்டு, அந்த ஆவி உண்பதற்கென்று சில பொருள்களையும் இட்டு வந்தனர்; சில தாழிகளில் சாம்பலும் உணவுப் பொருள்களுமே காணப்படுகின்றன. எலும்பை வீசிவிட்டனர் போலும்! அல்லது எலும்பே அகப்படவில்லை போலும்! இத்தகைய தாழிகள் பல பலுசிஸ்த்தானத்திலும் கிடைத்துள்ளன. பிணங்களைப் புதைத்தல் சிறு வரவிற்று. மொஹெஞ்சொ—தாரோவில் புதைக்கப்பட்ட 21 எலும்புக்கூடுகள் அகப்பட்டனவாம். இவை அகப்பட்ட இடத்தைப் பரீட்சித்துப் பார்த்த ஆராய்ச்சியாளர், 'இவை, அந்நகரம் அழிவடைந்த போழ்து இறந்தவருடைய எலும்புகள்' எனக் கூறுகின்றனர். எலும்புக்கூடுகளில் சில, **பழைய ஆஸ்ட்ரேலியர்**, (Proto-Australoids) **மத்திய தரைக் கடற்பிரதேசத்தினர்** (Mediterraneans), **அல்பைனர்** (Alpines) இவர்களின் எலும்புக்கூடுகளை ஒத்துள்ளன என்பர் ஆராய்ச்சியாளர்.

இவர்கள் திராவிடரே :—இச்சிந்துப் பிரதேச மக்கள் காலம் குறைந்தது கி. மு. 3250—கி. மு. 2750 ஆக இருக்கக் கூடியதே எனச் சர்ஜான் மார்ஷல், முக்கர்ஜி, ஹீராஸ் பாதிரியார், R. P. சண்டா போன்ற ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இச்சிந்துப் பிரதேச நாகரிக மக்கள் திராவிடர் என்று சிலரும், இல்லை என்று வேறு சிலரும் கூறுகின்றனர். ஹீராஸ் பாதிரியார், 'திராவிடரே' என அறுதியிட்டுக் கூறுகின்றார். பலுசிஸ்தானத்தில் உள்ள திராவிட பாஷையாகிய

'ப்ராஹி'யையும் வடஇந்தியாவில் உள்ள திராவிட இனமொழி களான **கோண்ட், கூய், ஓராஓன், இராஜ்மஹால்** இவற்றையும் **நோக்குகையில், பழைய திராவிடம்** (பழந்தமிழ்) வடஇந்தியா **வில் இருந்திருத்தல்** கூடியதே என்பது மொழியாராய்ச்சி யாளர் துணிபு. அத்துடன் சிந்துப்பிரதேச மக்கள் மதத்துக் கும் தமிழரிடம் இன்றுள்ள மதத்துக்கும் சிறந்த வேறு பாடில்லை; அம்மக்கள் பழக்க வழக்கங்கள், வழிபாடுகள் முதலியன சுமேரியரிடமும் காணப்பட்டவையே என **டாக்டர்** H. R. ஹால் என்னும் பேரறிஞர் கூறலாலும், அவரே, 'சுமேரியர் திராவிடரைப் பெரிதும் ஒத்திருந்தவர்' எனக் கூறலாலும், சிந்துப் பிரதேச மக்கள் திராவிடராக இருத்தல் கூடியதே எனமுடிவு கூறல் பெருந்தவறு ஆகாது. மேலும், இந்தியாவில் ஆரியர்க்கு முற்பட்ட நாகரிக மக்கள் திராவிடரே என்பது ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புக்கொண்டதே. இச்சிந்துப் பிரதேச மக்கள் ஆரியர்க்கு முற்பட்டவர். ஆதலின், இவர்கள் திராவிடராக இருந்திருத்தல் கூடியதே என்னலாம்.

சிந்து நதிக்கரையில் குடியேறிய ஆரியர் முதலில் செய்த ரிக்வேதத்தில் உள்ள சுலோகங்கள் பல ஆரியர் அல்லா மக்களை வருணித்துள்ளன. அவரோடு ஆரியர் இட்ட போர் களைக் குறித்துள்ளன. அவற்றைக் கூர்ந்து காண்கையில், அவ் வாரியர் அல்லார் பழைய **சிந்துப் பிரதேச மக்களே** என்பது நன்கு புலனாகும். ஆரியரால் தாசர், தஸ்யுஸ், அசுரர், இராக்கதர் எனப்பட்டவர் **திராவிடரே** என்பது S. K. டட் போன்ற சரித்திராசிரியர் துணிபு. இவை அனைத்திற்கும் மேலாகச் **சிவ வணக்கம்** இன்று தமிழகத்தில் உள்ள அளவு இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்பதும், அச்சிவ வணக் கத்தைப் பெரிய அளவில் சிந்துப் பிரதேச மக்கள் கொண்டிருந் தனர் என்பதும் நோக்க—உண்மை வெளியாகும். மேலும் சிந்துப் பிரதேசக் குறியீடுகள்—ஒரு மொழியின் தொடக்க நிலையைக் குறிப்பன. அந்நிலைபற்றிய விளக்கம் இந்தியாவில் வேறு எம்மொழி நூலிலும் கூறப்படாது, **தமிழ் நூல்களில் மட்டுமே** (மயிலைநாதர் உரை, யா-கல விருத்தியுரை—தன்மை எழுத்து, உரு எழுத்து முதலியன; கண்ணெழுத்து-சிலப்.; கரந்தெழுத்து—சிந்தாமணி.)—**கூறியிருத்தலும்** கருதற்பாலது. இவை அனைத்தையும் நடுநிலையிலிருந்து ஆராய்பவர் எவராயி னும்—**சிந்துப் பிரதேச மக்கள் பண்டைத் திராவிடரே** (பண் டைத்தமிழரே) **ஆவர்** எனத்துணிவர் என்பதில் ஐயமில்லை. நிற்க.

"சிந்துப்பிரதேச மக்கள் பழைய ஆஸ்ட்ரேலியர்—மத்திய தரைக்கடற் பிரதேசத்தினர்—அல்பைனர் இவர்தம் கூட்டுற

வால் தோன்றியவர் எனக்கருத இடமுண்டு. இவர்கள் நாகரிகம் சுமேரியர் நாகரிகத்தை ஒத்தது. இவர்கள் மத்திய தரைக்கடலிலிருந்து இந்தியா புகுந்தவராதல் வேண்டும். சுமேரியரும் இவர்தம் இனத்தவரே. அவர்தம்மொழி—கூட்டு மொழி (agglutinative) திராவிடமே ஆகும். அது சித்திர சங்கேதக் குறிகளையே முதலில் பயன்படுத்தியது............

"சுமேரியரைப்போன்ற மக்கள் இந்தியாவில் சிறப்பாகத் தமிழரே ஆவர். அக்காலத்தில் மெசபொட்டோமியாவுக்கும் தென்இந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கலாம். மெசபொட்டோமியாவுக்கும் சிந்துப் பிரதேசத்துக்கும் தரை வழியாகப் போக்குவரவு உண்டு என்பதற்கு இரண்டு இடங்களிலும் வழியிலும் அகப்பட்டுள்ளன ஒத்த பொருள்களே சான்றாகும். பலுசிஸ்தானத்தில் உள்ள 'ப்ராஹுி' மொழியே மொஹெஞ்சொ—தாரோ முதலிய இடங்களில் வாழ்ந்த மக்கள்—இந்தியாவுக்கு அறிவுக்களஞ்சியமாக இருந்த மக்கள்-திராவிட மொழியைப் பேசியவர்களே என்பதை மெய்பிக்கத் தக்கதாகும்................

"இப்பண்டைத் திராவிட மக்கள் மதமே பிற்கால வைதிக இந்து மதத்துக்கு உரையாணியாக நின்றது. வேதகால நாகரிகத்தில் தன் செல்வாக்கைப் பயன்படுத்தியதும் இதுவே யாகும். சிந்துப் பிரதேச எழுத்துக் குறிகளிடமிருந்தே 'பிராமி' எழுத்துக்கள் வளர்ச்சி பெற்றவை. அப்பிராமியி லிருந்தே சம்ஸ்கிருத எழுத்துக்கள் தோன்றின. 'ஆரியர் பல இடங்களிலும் அலைந்து திரிந்தவர் ஆதலின் தங்கள் மொழிக்கு உரிய எழுத்துக்களைக் கண்டுபிடிக்க அவர்களால் கூடவில்லை; எங்கெந்த நாட்டுக்குச் சென்றனரோ, அந்தந்த நாட்டு எழுத்துக்களைச் சில மாறுதல்களோடு தமதாக்கிக் கொண்டனர்' என்பர் E. தாமஸ். அவர்கொண்ட எண்ணம் சரி என்பதையும், இந்திய ஆரியர் சிந்துப் பிரதேசத்துக் குறியீடுகளைத் தாம் தங்கள் மொழிக்குப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதையும் பேராசிரியர் லாங்டன் (Professor Langdon) மெய்ப்பித்து விட்டார்................

"ப்ராஹுி பேசும் மக்கள், மொஹெஞ்சொ—தாரோவில் தம் முன்னோர் வாழ்ந்தனர் எனக் கூறுகின்றனர். ஈரானிலும் மெசபொட்டோமியாவிலும் சில திராவிட இடப்பெயர்கள் காணப்படுகின்றன. மிட்டனி (கரியன்) என்னும் இடத்தில் பேசப்படும் பழைய மொழி ஒன்றில் தற்காலத்திய திராவிட மொழிகளில் உள்ள ஒருமைப்பாடு சிறப்பாகக் காணப்படு கின்றது................

ஊனும் உறக்கமும்

[வித்வான் மு. வரதராஜன், (B.O.L.) திருப்பத்தூர்]

(௧௬0-ஆம் பக்கத்தொடர்ச்சி)

இனி, உறக்கம் என்பது யாது? உழைத்த உடலுக்கு ஓய்வு அளிப்பதும், தேய்ந்த உறுப்புக்கு வளர்ச்சி நல்குவதும் யாதோ, அதுவே உறக்கம் எனப்படும். உணவைக் குறித்து மக்கள் கொள்கையும் ஆராய்ச்சியும் வேறுபடுதல் போலவே, உறக்கத்தைக் குறித்தும் வேறுபடும். உறக்கத்துக் குரிய நேரம் எவ்வளவு என்பதைப் பலரும் பலவாறு கூறுகின்றனர். ஆங்கிலத்தில், ஆண் ஆறு மணிநேரமும், பெண் ஏழுமணி நேரமும், அறிவிலி எட்டுமணி நேரமும் உறங்குதல் வேண்டும் என்னும் கருத்தமைந்த பழமொழி ஒன்று உண்டு. ஆனால், பலருடைய வாழ்க்கை வரலாறுகளை ஆராயின், இக்கூற்று உண்மையா என்பது தெரியும்.

அறிவிற் சிறந்தோர் எனப் பேர் பெற்றவர்களுள், சிலர் நாள்தோறும் நான்கு மணி நேரம் தூங்கும் பழக்க முடைய வராக இருக்க, மற்றுஞ் சிலர் அதற்கு இரட்டிப்பான நேரம்—எட்டு மணிநேரம் தூங்குகின்றனர். விஞ்ஞான ஆராய்ச்சியாளருள் சிறந்து விளங்கிய மார்க்கோனி என்பவர் "தூக்கத்திற்கு உரிய நேரத்தைப் பற்றிக் கவலை இல்லை; தூக்கத்தின் தன்மையும் பயனுமே ஆராய்ச்சிக்கு உரியவை" என்று கூறினார். சிறிது நேரம் தூங்கினும் ஆழ்ந்த தூக்கமாயிருப்பின், மிகுந்த பயன் தரும். அங்ஙனமின்றி, நீண்ட நேரம் தூங்கினும், கனவும் கலேவும் நிறைந்த தூக்கமாயிருப்பின், சிறிதும் பயனில்லை என்பதே அவர்தம் கருத்து. ஆதலின், தூக்கத்திற்கு அளவு ஏற்படுத்துதல் கூடுமோ?

எனினும், தற்கால ஆங்கில ஆசிரியர்களுள் சிறந்து விளங்குகின்ற திரு. எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்பவர், எட்டுமணி நேரத்தூக்கம் குறைந்த அளவாகும் என்று கூறுகின்றார். மிகப் பெரிய செல்வராகிய ஹென்றி போர்டு (Henry Ford) என்பவர் தாம் தூங்குவது ஆறு மணிநேரம் என்றும், ஆனல் படுக்கையில் கிடப்பது ஒன்பது மணிநேரம் என்றும் கூறினர். ஐரோப்பா முழுவதையும் ஒரு காலத்தில் கலக்கிய மாபெருவீரராகிய நெப்போலியன், சிறிதும் களைப்பு இன்றி இருபத்து நான்கு மணி நேரமும் உழைக்கும் வன்மை உடையவராக இருந்தார். அவர் உறங்கிய நாட்களில் சேர்ந்தாற்

போல் இரண்டு மணி நேரத்துக்குமேல் உறங்கியதில்லை. இது பலர்க்கும் விந்தையாகவே தோன்றும் அன்றோ? எவ்வளவு நேரம் உறங்குதல் வேண்டும் என்பதில், இங்ஙனம் கருத்து வேற்றுமை பெருகிக் கொண்டே செல்கின்றது.

உறக்கம் இன்றியமையாது இருப்பதற்குக் காரணம் என்ன என்று வினவினால், எந்நேரமும் உழைத்து வரும் மூளைக்கு ஓய்வுவேண்டும். ஆதலின், அஃது இன்றியமையாதது என்கின்றனர். ஆனால், இக்காலத்து ஆராய்ச்சியாளருள் ஒரு சிலர்—பாவ்லோ (Pavlov) முதலிய சிலர் கூறுவது இதற்கு முற்றிலும் மாறாக இருக்கின்றது. "மூளை எப்போதும் ஓய்ந்து கிடப்பதில்லை; கனவு அற்ற ஆழ்ந்த உறக்கத்திலும் அது வேலை செய்து கொண்டே இருக்கின்றது, முற்றும் ஓய்ந்திருத்தல் இல்லை" என்று கூறுகின்றனர். ஆனால், ஒன்றும் அறியாத—கனவு அற்ற உறக்கத்தின்போது, மூளை வாளா இராவிடினும், களைப்பைத் தரும் உழைப்பில் ஈடுபடுதல் இல்லை என்று திண்ணமாகக் கூறலாம்.

உறக்கத்திற்குரிய காலம் எது என்பதை இனி ஆராய்வோம். இரவே உறக்கத்திற்கு உரியது எனப் பெரும்பான்மையோரால் கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் என்ன? இராக்காலத்தில் ஒலியும் ஒளியும் இன்மையே காரணமாகும். ஒலி அடங்கி இருத்தலாலும் இருள் சூழ்ந்திருத்தலாலும் நுண் பொறிகளாகிய காது, கண் இவற்றின் நரம்புகளுக்குரிய மூளைப்பகுதியில் கலைவு ஏற்படுதல் இல்லை. ஆதலின், உறக்கத்தால் பெறத்தக்க பயனை இரவில் நன்குபெற இயலுகின்றது. இதுகாரணமாகவே, உறக்கத்தின்போது சுற்றுப்புறம் அமைதியாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றது. இதை விளக்கும் நிகழ்ச்சிகள் பல. அவற்றுள் ஒன்று ஈண்டுக் குறிக்கத்தகுந்த வியப்பு வாய்ந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர், மேனாட்டில் மணமுறிவு (Divorce) செய்து கொண்ட ஒருத்தி, முறை மன்றத் தலைவர் (Court Judge) முன்பு தன் கணவனைப்பற்றிக் குறை கூறினபோது குறிப்பிட்ட காரணம் ஒன்றே. அவ்வொரு காரணமாவது "என் கணவன் இரவில் தூங்குகையில் குறட்டை விடுவதனால், நான் அவருடன் உறங்க முடிவதில்லை; அதனால் இராப்பொழுதெல்லாம் இன்பமும் அமைதியும் இன்றிக் கழிகின்றது; என் உடல்நலமும் கெடுகின்றது" என்பதாம். ஆனால், சந்தைகளிலும், திருவிழாக் கூட்டங்களிலும், புகைவண்டி நிலையங்களிலும் பேரொலிக்கிடையே சிலர் உறங்குவதைக் காண வியப்புமிகுகின்றது.

உறங்கும் அறையில் விளக்கொளியும் இல்லாதிருத்தல் வேண்டும் என்று பலர் விரும்புகின்றனர். காரணம் என்ன? கண் நரம்புகளுக்கு ஓய்வு வேண்டின், ஒளி நிறைந்த இடத்தில் கண்மூடி உறங்கினும் பயன் இல்லை, இருள் சூழ்ந்த இடமே கண்ணுக்கு ஓய்வுதரும் என்பதே காரணமாகும். இரவில் நாள்தோறும் முழு நிலவொளி இருப்பின், இத்தகைய ஓய்வு பெறுதல் முடியாமற்போகும். திங்கள்தோறும் ஒரு நாளில் நிறை ஒளியும் சில நாளில் குறை ஒளியும் பிறநாளில் இருளும் இயற்கையில் அமைந்திருத்தல் இந்நலன் கருதியேபோலும்! பச்சிளங் குழந்தைகள் இரவில் மிகுதியாக உறங்குதல் வேண்டும் என்றும், பகலில் மிகுதியாக உறங்கி இரவில் விழித்தல் நோய்க்கு அறிகுறி என்றும் அறிந்தோர் கூறுவது ஈண்டுக் கருதற்பாலதே. ஆயினும், இரவில் உறங்கும் பழக்கத்தை மாற்றிப் பகலில் உறங்க மக்களுக்கும் விலங்குகளுக்கும் ஆற்றல் உண்டு; இராத்தொழிலை மேற்கொண்ட தொழிலாளர் வாழ்வாலும் 'சர்க்கஸ்' ஆட்டங்களில் பழகும் விலங்குகளின் வாழ்வாலும் பிறவாற்றாலும் இதை அறியலாம். எனினும் பகலில் உறங்குவதால் தீங்கு இல்லை என்று கருதல் கூடாது. அத்தகைய பழக்க முடையவர்கள் அரும்பெரு முயற்சி செய்தே தங்கள் உடல் நலனைக் காத்தல் இயலுகின்றது. ஒரு தீய பழக்கத்தால் ஏற்படுத்திக்கொண்ட தீங்கைப் பல நற் பழக்கங்களால் போக்க முயல்வதை அவர்களிடம் காணலாம். ஆதலின், பெரும்பான்மையான விலங்கினங்களுக்கும், பிற உயிர்களுக்கும், மக்களுக்கும் உறக்கத்துக்கு இயற்கையாக உரிய நேரம் இராப்பொழுதே ஆகும்.

இரவு பகல் என்ற வரையறை இன்றி எவ்வேளையும் இடையிடையே தூங்கி விழிப்போரும் இடைவிடாது தூங்கு வோரும் மக்களிடையே உள்ளனர்; ஆனால் அத்தகையோர் மிகச்சிலரே. பறவை யினங்களில் ஒருவகைப் பறவை 'கும்ப கருண'னுக உள்ளது; அது தவளைபோன்ற வாயினைப் பெற்றது; மிகுதியாகத் தூங்கிக்கொண்டிருப்பது. உறங்கும் போது அதன் மூளையின் எந்தப் பகுதியும் வேலை செய்வதாகத் தெரியவில்லை; எல்லாப் பகுதியும் வேலை செய்யாமல் நின்று விடும் என்று அறியக் கூடியவாறு அப்பறவை உறங்குகின்றது. தூங்கும்போது அது பற்றியுள்ள கிளையினை அசைத்தாலும் அசையுங்கள்; அல்லது அதன் அருகே உள்ள ஒன்றினைச் சுட்டுத் தள்ளுங்கள்; அப்பறவை உறக்கத்திலிருந்து விழித் தெழுதற்குரிய குறிகளை அப்பொழுதும் காணமுடியாது. பறவைகளில் வேறு எதுவும் இவ்வாறு உறங்குவதில்லை.

பொதுவாகப் பறவைகள் மிக எளிதில் 'விழித்துக்கொள்பவை. இரவில் பறவைகள் கூடி உறங்கும் மரம் ஒன்றின்மீது சிறிய தொரு கல் எறிந்தாலும், அவையெல்லாம் ஒலிசெய்துகொண்டு எழுந்து பறந்தோடிக் கலைவதைக் காண்கின்றோம். இருண்ட இராப்பொழுதில் காக்கைகள் கூடி உறங்குகின்ற மரத்தின் கீழ் நெருப்புக் குச்சியைக் கிழித்தாலும் அவை விழித்து எழுந்து கலையும். ஆனால், இத் தவளைவாய்ப் பறவையோ தனித்தவோர் இயல்பு வாய்ந்ததாக உள்ளது. அன்றியும், பறவைகள் எல்லாம் அழகிய உடலமைப்பு உடையனவாக விளங்க, இத்தவளைவாய்மட்டும் வெறுக்கத்தக்க தோற்றம் உடையதாகச் சிறிதும் அழகின்றி இருக்கின்றது. (மூதேவி யின் அருள் அழகு வடிவம் போலும் !)

நத்தைகளில் பல ஆறு திங்கள் தூங்கவல்லன. உயிர்க் காட்சி நிலயம் ஒன்றில் ஒரு நத்தை இரண்டரை ஆண்டுகள் உறங்கியதாகவும் உறங்கி எழுந்தவுடன் உணவை நாடியதாக வும் கண்டறிந்தனர்.

ஆப்பிரிக்காவில் உள்ள ஒருவகை மீன் வேனிற்காலத்தில் ஆற்றுப்படுகையின் மணலில் குழிதோண்டித் தன்னை மறைத் துக் கொள்வதாகவும், கார்காலத்து மழையால் மணல் புரண்டு வெளிப்படுத்தும் வரையில் அங்கேயே உறங்குவதாகவும் கூறப் படுகின்றது. மீன் காட்சி நிலயத்தில் (Aquarium) மீன்கள் எந்நேரமும் அசைந்தாடி ஓடுவதைக் காண்கின்றோம். அதனால் அவை உறங்குதல் இல்லையோ என்று ஐயுறல் வேண்டா. கட லடியில் வாழும் மீன்கள் பகலில் மணலில் உடலைப் பதித்து விட்டு உறங்குகின்றன; இரவில் இரை தேடுகின்றன. மற்ற மீன்களும் இருபத்து நான்கு மணி நேரத்தில் சிறிது நேரம் அசைவற்று இருக்கின்றன. அந்நேரமே அவற்றின் உறக்க நேரமாகும். அப்போது, சில நீரடியில் தரையின்மீது வாளா கிடக்கும்; சில பாறைகளின்மீது சாய்ந்து கிடக்கும்; சில செடி கொடிகளைச் சார்ந்து இருக்கும்; மற்றுஞ்சில நீர் மட்டத்திற்கு வந்து அசைவற்று இருக்கும். இங்ஙனம் எல்லா மீன்களும் உறங்குகின்றன என்பர்.

'பசி வந்தபோது பத்தும் பறந்துபோம்' என்று கூறிய புலவர் அப்பத்தினுள் உறக்கத்தை ஏன் சேர்க்காமல் விடுத் தனரோ அறியோம். மக்களுள் பெரும்பான்மையானவர்க் குப் பசி மிகுந்தபோது உறக்கம் வருவதில்லை. குழந்தை களும் பசியுடன் படுத்துக் கொண்டால் நன்கு தூங்குவதில்லை. "வயிற்றில் ஒன்றும் இல்லாமையால் தூக்கம் பிடிக்கவில்லை"

என்று பலருங் கூறுவர். ஆனால், மற்ற உயிரினங்களிடையே இதற்கு மாறான இயல்பு காணப்படுகின்றது.

கார்காலத்து இரவில் குளங்குட்டைகளில் பாடும் தவளைகள் நிலத்தின்மேல் நான்கு திங்களும் நிலத்தின்கீழ் எட்டுத் திங்களும் காலங் கழிக்கின்றன. கோடைமுழுவதும் உணவின்றி உறங்கிக் கிடக்கின்றன; மழைபெய்ததும் மேலே வந்து பாடுகின்றன. எய்ப்பன்றியும் சில வௌவால்களும் ஆண்டுதோறும் சில திங்களில் உணவின்றி உறங்குகின்றன. ஆறு குளங்களில் நீர்வற்றிய பின், கணக்கற்ற நுண்ணுயிர்கள் முழு ஓய்வுடன் உறங்குகின்றன என்று அணுநோக்காடி (Microscope) கொண்டு ஆராய்ந்தறிந்து கூறுகின்றனர். உணவு கிடைக்காத காலங்களில் அதன்பொருட்டுத் தேடி அலைந்து களைப்படைவதைவிட, இருந்தபடி இருந்தும் கிடந்தபடி கிடந்தும் உறங்குதலே நலம் என்று, வடதுருவத்தை அண்மியுள்ள நாடுகளில் வாழும் விலங்குகள் பல உறங்கத் தொடங்கிப் பல திங்கள் வரை வாளா இருக்கின்றன. அங்ஙனம் உறங்குவதால், குருதி ஓட்டம் குறைந்து, உடலுறுப்புக்கள் வேலை செய்தல் நின்று, அவற்றிற்கு உணவு தேவையில்லை ஆகின்றது. 'சிக்கனம், சிக்கனம்' என்று சொன்மாரி பொழிந்தும் மக்களிடையே உண்மையில் செட்டு இல்லை. ஆனால், ஊண்வகையில் செட்டாக வாழக் கற்று, உறக்கத்தில் காலத்தைப் போக்கும் உயிரினங்கள் வாழ்வு உண்மையில் செட்டான வாழ்வே அன்றோ!

(தொடரும்).

உலகமுற்றிலுமுள்ள பொருட்காப்பு நிலயங்கள் (Banks) எல்லாவற்றிலுஞ் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் தங்கத்தின் விலை மதிப்பைவிட மிகுந்த ஒரு தொகையை ஆங்கில அரசாங்கத்தார் 1938-ஆம் ஆண்டில் போர்த்தளவாடங்களுக்காகச் செலவிட்டுள்ளனர்.

வட இந்திய மொழியினங்கள்

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

ஆரியர் வருகையால் இந்தியப் பெருநாட்டிற் பண்டு பயின்றிருந்த உள்நாட்டு மொழிகள் பல்வேறு மாறுதல்களை யடைந்தன. அவற்றை யெல்லாம் ஆராய்ந்து சீர்தூக்கி இனம் வகுத்த மேனாட்டறிஞர்கள் ஐம்பெரு மொழியினங்களாக அவற்றைப் பிரித்து முடிவுகட்டினர். **ஆரியம், திராவிடம், முண்டா, மான்குமேர், திபேத்தோ—சீனம்** என்பனவே அவை. இவற்றுள் மிகவுந் தொன்மைவாய்ந்ததாகக் கருதப்படுவது முண்டா மொழியினமே. (இவ்வினத்தைப் பற்றிய குறிப்புக்கள் முன்னர் ௩-ஆம் பரலில் வெளிவந்துள்ளன.) ஈண்டு ஆரியத்தைப் பற்றிய சில குறிப்புக்கள் தரப்படுகின்றன.

ஆரியம் என்பது, கன்றுகாலிகளை மேய்த்துக்கொண்டு ஊரூராய், நாடு நாடாய்த் திரிந்து வாழ்க்கையை நடத்திவந்த ஒரு பெருங்குழுவினரின் திருந்தா மொழியாகும். அக் குழுவினர் பின்னர் வட இந்தியாவினுட் புகுந்து பரந்து தங்கிய போதுதான் அவர்களுடைய மொழியும் திருத்தமுற்றுச் சீர்படுவதாயிற்று. அஸ்ஸாமின் கீழைப்பகுதிதொடங்கி பம்பாயை யடுத்த வடகன்னடம் வரை அவர்கள் மொழி பெருகியும் அருகியும் வழங்குவதாயிற்று. தாந்தாம் உறையுமிடங்களி லிருந்த பண்டைய இந்திய மக்களுடன் கலந்து உறவாடிய முறையில் அவர்கள் தங்களுடைய குழூஉச் சிறப்பியல்புகளை ஒருவ விட்டுவந்தாலும், தங்கள் மொழிப்பற்றை மட்டும் அவர்கள் கைவிட்டதில்லை. அதனால் அவ்வத் தொன்மக்களுடைய சொந்த மொழிகள் வழக்கிறந்து போக, இவ்வாரிய மக்கள்தம் மொழியே மேம்பாடுறுவதாயிற்று. திருந்திய ஓர் ஆரிய மொழியுடன் பண்டைய இந்திய உள்நாட்டு மொழியொன்று தொடர்புற்றுக் கலக்கநேரிட்ட போதெல்லாம் பின்னையதாகிய உள்நாட்டு மொழியே தன் தனிச்சிறப்பிழந்து கேடுறுகின்றதென்பது மொழிநூலுண்மைகளில் ஒன்றாகும். வந்தேறிகளாய ஆரியர்கள் உள்நாட்டுப் பண்டைய மொழிகளைக் கற்றுப் பேச எளிதில் முன்வருவதில்லை. உள்நாட்டுத் தொன்மக்களோ எனில் இயல்பான தாராள மனப்பான்மையாலும், கொள்வினை கொடுப்பினைகளினால் நேருங் கட்டாயத்தினாலும் அரையுங்குறையுமாக வந்தேறிகளின் மொழியைப் பேசப் பழகிக் கொள்வார்கள். காலமேறவேற இந்த அரை குறைப் பயிற்சியே திருத்தமுற்று ஏறக்குறைய முதன்

மொழியோடு ஒப்புக் கூறத்தக்க நிலையை அடைகின்றது. இந் நிலையில் பண்டைய உள்நாட்டுமொழி சிறிது சிறிதாகப் புறக் கணிக்கப்பட்டு மங்கி மடிந்து மாய்ந்தொழிகிறது. நன்கு திருத்தமுற்றுக் கலையுரம் பெற்றுச் செம்மொழிகளாக வழங் கும் தொன்மொழிகள் நிலவும் தென்னிந்தியப் பகுதி யொன் றில் மட்டுமே ஆரியம் வெற்றி பெற முடியாது தனித்து நின்று தயங்குவதாயிற்று. இது பண்டைய வரலாற் றுண்மையாகும். எனினும், பண்டைய இந்திய மொழியொன்று ஆரிய மொழி வழங்கு மிடத்திற் பரவிக்கலப்புற்று அதனை வழக்கிழக்கச் செய்தது என்பது யாண்டு மில்லை.

இனி, ஆரியமென்பது இண்டோ ஐரோப்பிய மொழி யினத்தைச் சேர்ந்தமொழிகளில் ஒன்றாகும் அஃது இண்டோ ஆரியமென்றும், ஈரானிய மென்றும் இரு பிரிவினது.

ஈரானிய மொழிகள் பேசும் பகுதியினர் பாரஸீகம், பலூசிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் என்னும் நாடுகளில் தங்கி உறைவாராயினர். அவ்வாறு பரந்துறைய நேர்ந்தமை காரணமாக அவர்கள் பேசிய மொழிகள் **பேர்ஸிக்** என்றும், **மீடிக்** என்றும் இருபிரிவாகத் தொகுக்கப் பெற்றன. பெர்ஷிக் என்பது இக்காலப் **பாரசீக** மொழியின் பண்டைப் பெயரா கும். இதுவே முஸல்மான்களின் தாய்மொழி. மீடிக் என்பதோ அவெஸ்தா இனத்தாருக்குரியதாகும்; **பஷ்டோ, வேளாக்** என்ற இருபெரு ஈரானிய மொழிகளும் அதனுடைய கிளை மொழிகளேயாம்.

இனி இண்டோ—ஆரியத்தை நோக்குவாம். வடமொழி நிலநூற்படி இந்தியா "மத்திய தேசம்" அல்லது நடுநாடு என்றும், இதரதேசம் என்றும் இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இந்த "மத்திய தேசம்" என்பதே வடமொழி நூல்களில் அடிக்கடி ஆரியர்களின் இந்தியத் தாயகமாகப் போற்றப்பட்டுள்ளதாகும். இதர தேசமாகிய பிறபகுதிகளி லெல்லாம் காட்டுமிராண்டிகள் வசித்து வந்தார்களெனவே "மத்தியதேச" ஆரியர்கள் கருதிவந்தனர். இந்த "மத்திய தேசம்" என்பது வடக்கில் இமயத்தையும், தெற்கில் விந்தியத் தையும், மேற்கில் கிழைப் பஞ்சாப்பையும், கிழக்கில் கங்கை யமுனைக்கூடலையும் எல்லைகளாகக் கொண்ட ஒரு பெரும் பகுதி யாகும். இப்பகுதியினர் பேசிவந்த மொழி **சௌரசேனி** என்ற பண்டைப் பாகதமாகும். இச்சௌரசேனி இந்தி மொழியின் பெரும்பகுதியாகிய **மேலை** இந்திக்குத் தாய் மொழியாம். இண்டோ—ஆரியமொழியினத்தைச் சேர்ந்த

இச்சௌரசேனியே பின்னர் "மத்தியதேசத்" திருந்திய ஆரிய மொழியாக மாறுதலடைந்தது. அதுவே மேலும் மேலும் செம்மை செய்யப்பட்டு முறையான இலக்கண அமைப்புடைய தாகப் பின்னர் மாறியதன் காரணத்தாற் "சமஸ்கிருதம்" (அல்லது செம்மைசெய்யப்பட்டது) என்றுபெயர் பெறுவதாயிற்று. இச்செம்மைப்பாடு கி. மு. 300-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் பாணினி இலக்கணத்தில் உருப்பெற்றது. எனவே, கற்றோரால் இலக்கண முறைப்படி திருத்திச் செம்மை செய்யப்பெற்ற ஆரியப்பாகதங்களே "சமஸ்கிருதம்" என்பது ஒருவாறு விளங்கும். அன்றியும், பண்டைய ஆரியமொழிகளும், பண்டைய இந்திய உள்நாட்டு மொழிகளை யொப்பத் திருந்தா மொழிகளேயாம் என்பதும் விளக்கமுறும். இதனால், திருத்தஞ் செய்யப்பெற்றுப் புத்துருக்கொண்ட "சமஸ்கிருத" மொழியினின்றும் வேறெம் மொழியுங் கிளைத்திருக்க முடியா தென்பது தெளிவு; குறிப்பிட்ட ஒருமொழியும் வடமொழியாகிய "சமஸ்கிருத" மும் ஒரே பண்டைய மொழியிலிருந்து பிறந்து பிரிந்தவை என்று வேண்டுமானால் வலிந்து கூறிக் கொள்ளலாம்.

"மத்திய தேச"த்திற்கு மேற்கிலும் தென் மேற்கிலும் வந்துறைந்த ஆரியர்கள் பேசிவந்த மொழிகள் காஷ்மீரி, கோஹிஸ்தானி, லஃஹ்ண்டா, சிந்தி என்பனவாம். இவ்விருதிறத் தாருக்கு மிடையே வசித்துவந்த மக்கள் இம்மொழிச் சொற்களைத் தத்தம் சொந்த மொழிகளுடன் கலந்து பேசிவந்தனர்; அதனால் அம்மொழிகள் பின்னர் தனியுருவேற்றுத் தனிப் பெயர் பெறுவவாயின. இராஜஸ்தானி, பஹாரி, குஜராத்தி, பஞ்சாபி என்பன அம்மொழிகளாம்.

இனி, தொகை மிகுதியாலும், மண்ணாசையாலும் "மத்திய தேச"த்திலும் அதன் மேலைத் திசையிலுமிருந்த ஆரிய மக்கள் கிழக்கிலும் தென் கிழக்கிலும் நாளாவட்டத்தில் பரவி அங்குள்ள மக்களுடன் உறைவாராயினர். அதனால் ஆங்காங்கிருந்த மொழிகள் ஆரிய மொழிக் கலப்புற்றுத் தத்தம் தனிச் சிறப்பைச் சிறிதுசிறிதாக இழக்கலாயின. மேற்கூறியாங்கு ஆரியமொழித் தாக்கை நேரே எதிர்த்து நின்று தம் தலைமை இழவாமலிருந்த மொழிகள் தென்னிந்தியத் திராவிட மொழிகளேயாம். அதிலும் இன்றளவும் புறங்கொடுக்காது உயர் தனிச் செம்மொழியென்று மொழியாராய்ச்சி வல்லுநராற் புகழ்ந்து போற்றப்பெறும் பெருமையுடன் திகழ்வது முன்னைப் பழைய மொழிகட்கும் முன்னைப் பழைய மொழியாகிய சீர்சால் தமிழ்மொழியொன்றே!.

இண்டோ ஆரியமொழியினத்திற்குரிய புள்ளி விவரங்கள் பின்வருவனவாம் :—

	பேசுபவர் தொகை (1901-ஆம் ஆண்டுக் கணக்குப்படி)
I. "மத்தியதேச" மொழி	
மேலை இந்தி	40,714,925
II. இடைப்பட்ட மொழிகள்	
(i) மத்திய தேச மொழித் தொடர்புடையன.	
இராஜஸ்தானி	10,917,712
பஹாரி மொழிகள்	3,124,681
குஜராத்தி	9,439,925
பஞ்சாபி	17,070,961
(ii) மத்தியதேச மொழித்தொடர்பு அருகியன.	
கீழை இந்தி	22,136,358
III. பிற "தேச" மொழிகள்	
(i) வடமேற்குத் தொகுதி.	
காஷ்மீரி	1,007,957
கோஹிஸ்தானி	36
லஹ்ண்டா	3,337,917
சிந்தீ	3,494,971
(ii) தென் தொகுதி.	
மராத்தி	18,237,899
(iii) கீழைத் தொகுதி.	
பிஹாரி	34,579,844
உறியா	9,687,429
வங்காளி	44,624,048
அஸ்ஸாமீஸ்	13,50,846
மொத்தம்	219,725,509

மாணிக்க நாயக்கரவர்களின் மாண்புறு முடங்கல்*

தமிழ் ஒலியியல் அகம்

சென்னை

பா. வே. மாணிக்கம் நாயக்கர்　　பெஜவாடா
பி. இ., எம். ஸி. ஐ.,　　24-8-1922
பொதுப்பணித்துறைக் கண்காணிப்
பொறிவலாளர்.
பெஜவாடா.

அன்புள்ள ஐய,

ஆங்கில மரபுச்சொற்கள் சிலவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்கள் வேண்டுமெனத் தாங்கள் விடுத்த 22-8-1922 எழுத்துக் கிடைக்கப்பெற்றேன்—என்னுடைய மொழிபெயர்ப்புக் குறிப்புக்கள் திருச்சிராப்பள்ளியிலிருக்கின்றன; எனினும், இயன்றவரை ஈண்டு எழுதுவல் :—

அக்கவுன்ட் (Account)—இவ்வாங்கிலச் சொல் தமிழில் இடத்திற் கேற்றவாறு பல பொருள்படும். பொதுப்பட "அக்கவுன்ட்" என்பது கணக்கு. அக்கவுன்ட் என்ற சொல் புள்ளி விவரங்களோடு கூடிய கணக்கைக் குறிக்குமிடத்து, அது தமிழில் குறிப்பு எனப்படும்.

"டே புக்" (Day Book)—ஆங்கிலத்தில் நாடோறும் எழுதிவைக்கப்படும் கணக்கைக் குறிப்பதாகும். இதனை நாட்குறிப்பு, நாட்குறிப்பேடு, நாட்குறிப்புச் சுவடி என்பனவற்றுள் யாதாயினுமொன்றாற் றமிழிற் குறிக்கலாம். †

"லெட்ஜர் அக்கவுன்ட்"—(Ledger Account)—பேரேடு. "லெட்ஜர் அக்கவுன்ட் புக்" என்பது பேரேட்டுச் சுவடி.

"டு அக்கவுன்ட்" (To account)—கணக்கிட. "அக்கவுன்டிங்" (accounting)—கணக்கிடுகை, குறிப்பு இடல், குறிப்புப் போடல்.

---

* இது சென்னை அரசாங்கக் கண்காணிப் பொறிவலாளரா யிருந்து காலஞ்சென்ற சிவபுரம் பெருநிலக்கிழவர் உயர்திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் எழுதிய ஆங்கில எழுத்தின் மொழிபெயர்ப்பாகும். —காழி. சிவ. க.

† நாள்வழிக் குறிப்பு என்று கொண்டால் பொருள் முற்றுப் பெறுவதாகும். —காழி. சிவ. க.

"அக்கவுன்டென்ட்" (Accountant)—**கணக்கன், கணக்காளன்.**

"பர்னிச்சர்" (Furniture)—இச்சொல் வேண்டுவன வற்றையெல்லாம் சேகரித்துக் கொடுப்பது என்றே பொருள் படும். ஆகவே, அதற்கு நேரான தமிழ் **செப்பம்** அல்லது **செப்பன்** என்பதாகும்.

"டு பர்னிஷ்" (To furnish)—**செப்பம் செய்ய.** எனினும், "பர்னிச்சர்" என்ற ஆங்கிலச் சொல் தன் பொருள் விரிவிற் குறைந்து சுருங்கித் தச்சுவேலையாலியன்ற பொருள்களை மட்டுங் குறிப்பதாயிற்று. சுருங்கிய அப்பொருளுக்கு நேரான தமிழ்ச்சொல் **தட்டுமுட்டு** என்பதாம். **தட்டு** என்பது தச்சுத் தொழில் அல்லது இணைப்பு என்பதைக் குறிக்கும். "ஜாயினெரி" (Joinery) என்பது தட்டுவேலை. **முட்டு** என்பது பொருள்கள் அல்லது கருவிகள் என்று பொருள் படும். தெலுங்குமொழியிலுள்ள "பனிமுட்லு" என்ற சொல்லில் "முட்லு" என்பது இன்றும் பொருள்கள் அல்லது கருவிகளையே குறிக்கும்; அது தமிழ்ச்சொல்லடியாகப் பிறந்ததேயாம். எனவே, "பர்னிச்சர்" என்பதற்குத் **தட்டுமுட்டு** என்றே பொருள் கூறலாம். அச்சொல் எளிதில் விளங்குவதொன்றுமாகும்.

"பர்னிச்சர் அக்கவுன்ட்" (Furniture account)—**தட்டுமுட்டுக் கணக்கு, செப்பக் கணக்கு, செப்பக் குறிப்பு, தட்டுமுட்டுக் குறிப்பு.**

"டிராவலிங் எக்ஸ்பென்ஸெஸ்" (Travelling expenses) என்பது **வழிச்செலவு.** உவின்ஸ்லோ (அகராதியைப்) பார்க்கவும். அஃது ஆட்சியிலுள்ளதொரு செந்தமிழ்ச்சொல்.

"ஸாலரீஸ்" (Salaries)—இச்சொல்லுக்கு நேரான பொருள் "உப்புப் பணம்" என்பதே. ஆயினும் நாளாவட்டத்தில் ஆண்டுக்கூலி அல்லது திங்கட்கூலியையே குறிக்க வழங்கப்படுவதாயிற்று. இச்சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் "உப்பீடு" என்பதாம்; அஃதாவது உப்புக்கீடான பொருள் என்பதாம். எனினும், அச்சொல் "ஸாலரீஸ்"* என்பதற்கு இக்காலை வழங்கும் பொருளைக் குறிக்காது. எனவே, அப்பொருளையுங் குறிக்கும் ஒரு சொல் வேண்டப்படும். **பணியீடு,**

* இலக்கை என்னுஞ்சொல் "ஸாலரீஸ்" என்பதற்குப் பொருளாகத் தமிழ்ப்பேரகராதியிற் கொடுக்கப்பட்டுள்ளது. அச்சொல் "சடு-ஜீயரரும்ப"த்தில் ஆளப்பட்டுள்ளது. —காழி. சிவ. க.

வினையீடு, பணிப்போன், ஊதிபம், பணிக்காசு என்பன ஆராய்தற்பாலன. "பே" (Pay) என்ற ஆங்கிலச்சொல் நேரே தமிழிற் "கூலி" எனப் பொருள்படும். ஆயினும் "கூலி" என்ற சொல் இக்காலை பொருளில் இழிவடைந்துவிட்டது. அதுபோன்றே, படி என்னுந் தமிழ்ச்சொல்லும் "மாதப்படி", "ஆண்டுப்படி" எனவழங்கி "ஸாலரி" என்பதைக் குறிப்பதாயினும், இக்காலை பொருளிலிழிவடைந்து பணியீட்டை விட்டுச் செலவீட்டைக் குறிப்பதாயிற்று. "படி நாள்" என்பது பணியீடு கொடுக்கும் நாளைக் குறிப்பதாகும். ஆகவே,

1. "ஸாலரி" (Salary)—பணிப்படி.

2. "டிராவலிங் அலவன்ஸ் (Travelling allowance)—நடைப்படி.

3. "டெய்லி அலவன்ஸ் (Daily allowance)—நாட்படி.

4. "மந்த்லி அலவன்ஸ்" (Monthly allowance)—திங்கட்படி.

என நேர்ச்சொற்கள் கொள்ளலாம். மேல் 2, 3-ற் கண்ட சொற்கள் இன்று வழக்காற்றிலுள்ளன.

"எஸ்டாபிளிஷ்மென்ட்" (Establishment)—என்ற ஆங்கிலச்சொல் நிலையாயுள்ள வேலைக்காரர்களைக் குறிப்பதாகும். அதற்கு நேரான தமிழ்ச்சொல் "பணவம்" என்பதாகும் எனினும், அஃது அருகிய வழக்குடையதானமையின், பணியாயம், வினையாயம், பணியீட்டம் என்பனவற்றுள் யாதானுமொன்றைக் கொள்ளலாம்.

"ஏஜென்ட்", "ஏஜென்ட்ஸ்" (Agent, Agents)—"பணவன்", "பணவர்". இச்சொற்கள் அருகிய வழக்குடைய. வினையாளன், வினையாளர் என்பன வழக்கத்திலுள்ள சொற்களாம்.

"ஆபீஸ்" (Office)—மன்று. "கச்சேரி" (Cutcherry) என்பதும் மன்று என்றே பொருள்படும். உவின்ஸ்லோ பார்க்க.

"பிராஞ்ச் ஆபீஸ்" (Branch Office)—கிளைமன்று.

"கன்டிஞ்சென்ட் எக்ஸ்பென்ஸெஸ்"—(Contingent expenses)—தாதுப்பொருளை நோக்கின் ஒட்டுச் செலவு என்றே பொருள்படும். அது "டோட்டல் எக்ஸ்பென்ஸெஸ்"

(Total expenses) என்ற மொத்தச் செலவைக் குறிப்பதாகக் கொள்ளலுங்கூடும். எனினும் ஒட்டு மோத்தச் செலவு என்பதே "டோட்டல் எக்ஸ்பென்ஸஸ்" என்பதற்கு நேரான தமிழ்ச் சொல்லாகும். ஆகவே, பொதுவாகச் சில்லறைச் செலவு, பிசிர் செலவு என்று சொல்லாக்கிக் கொள்ளலாம்.

"சர்விஸ்" (Service)—பணி.

"டு கெட் இன் சர்விஸ்" (To get in service)—பணியி லமர.

"ஸ்டேஷனரி அக்கவுண்ட்" (Stationery account)—எழுத்துமுட்டுக் கணக்கு. இங்கு எழுத்துமுட்டு என்பது எழுதுதற்குரிய கருவிப்பொருள்களையே குறிக்கும்.

என்னுடைய மொழிபெயர்ப்புக் குறிப்புக்கள் இருப்பின் இன்னும் பல சொற்களை எழுதியனுப்புதல் எளிதாயிருந்திருக்கும். மேலும், நான் என் அலுவல் மிகுதியால் மிகவும் நெருக்கப்பட்டுளேன். எனவே, மேல் கண்டுள்ள சொற்களை விருப்பம்போற் பயன்படுத்திக்கொள்க.

தங்கள் மெய்யன்பன்,
வே. மாணிக்கம்.

சென்னை ஜியார்ஜ் டவுன்
சித்தாந்த நூற்பதிப்புக் கழக
வினையாளர் அவர்கட்கு.

தேனீத் தூதர்கள்

பூச்சிப்புழுவினங்களில் தேனீயும் பட்டுப்புழுவுமே மக்களால் வளர்க்கப்பட்டு வருவனவாம். ஜப்பானியர்கள் தேனீக்களைச் சண்டைச்செய்தி கொண்டுசெல்லும் புறக்களுக்குப் பதிலாகப் பயன் படுத்திக்கொள்ள முயன்று வருகின்றனர். யாமகாட்டாவி லுள்ள ஒரு ஜப்பானிய அறிவியலறிஞர் இத்துறையில் உழைத்து வருகின்றார். தேனீயின் உடலில் சிறு சேணமொன்று இடப்படும். (அதனால் அதன் பறக்கும் வசதிக்குத் தடையொன்று முண்டாகாது.) அச்சேணத்திலுள்ள சிறிய பையொன்றில் மிகவும் மெல்லிய தாளிற் செய்தி குறித்தனுப்பப்படும். அச்செய்தி நுண்ணோக்காடியால் தான் படித்தறியப்படும்.

நறுவீ முல்லை

கல்வியறிவும் நல்லோர் சேர்க்கையும் இரக்கமான நெஞ்சமும் இல்லாமையால், நிரம்பவுந் தாழ்ந்த நிலைமையிலுள்ள மாந்தர்கள் தாம் தாம் தமது குலதெய்வமாகக் கும்பிட்டுவருங் காளி, பிடாரி, மாரி, குரங்குணி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன் முதலான சிறு தெய்வங்களுக்கு அளவிறந்த ஆடு கோழி எருமை முதலான குற்றமற்ற உயிர்களை வெட்டிப் பலி இடுகின்றார்கள்.

* * *

மக்களிற் பலர் தாழ்ந்தோர் ஆனதும் சிலர் உயர்ந்தோர் ஆனதும் அவரவர் இயற்கையினாலுஞ் செய்கையினாலும் அறிவினாலுமே என்பது எல்லார்க்கும் எல்லா நூலுக்கும் உடன்பாடாம்.

* * *

உயிர்களைக் கொலை செய்தலும் அவற்றின் ஊனைத் தின்னுதலு மாகிய புலைத்தொழில் எல்லாத்தீவினைத் தொழிலிலுங்கடைப்பட்டது.

* * *

கொலையாகிய தீவினைக் கடலைத் தாண்டி அருளொழுக்கமாகிய நல்வினைக் கரைமேல் ஏறின மேற்குலத்தவர்கள் கொல்லா அறத்தின் மேன்மையை எடுத்துச் சொல்லுதலாகிய படகைக்கொண்டு சென்று அத்தீவினைக் கடலிற் கிடந்து தத்தளிக்கும் மற்றைத் தாழ்குலத்த வரை எடுத்து உயர்த்திக் கரைசேர்த்தலே புகழும் அறமும் ஆகும்.

* * *

பிடாரி குரங்குணி எசக்கி மதுரைவீரன் முதலானவை யாவை? தாம் உயிரோடிருந்த காலங்களிற் பலவகையான கொடுஞ்செயல் களைச் செய்து அவற்றிற்காக அரசனாலும் பிறராலும் ஒறுக்கப்பட்டுக் காலம் முதிரா முன்னரே இறந்தொழிந்த மக்களின் பேய்வடிவங்களே யாகும்.

* * *

நம்போன்ற சிற்றுயிர்களிற் சேர்ந்த இப்பேய்களையும் மற்றெல்லா உயிர்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது சிவம் ஒன்றேயாம்.

—மறைமலை யடிகள்.

* * *

தக்கார்க் கெச்ச முண்டாதலும் தகவிலார்க் கில்லையாதலும் ஒருதலை.

* * *

அடக்கமுடைமையாவது மெய், மொழி, மனங்கள் தீ நெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனாதல்.

* * *

ஒருமைக்கட் செய்த வினையின்பயன் எழுமையுந் தொடரும்.

* * *

தீய சொல்லாவன தீங்கு பயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல் லென்பன.

அடங்குதல் மனம் புறத்துப் பரவாது அறத்தின் கண்ணே நிற்றல்.

* * *

செவ்வி தன்குறை கூறுதற்கேற்ற மனமொழி முகங்கள் இனியவாங் காலம்.

* * *

பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்த ராவர்.

* * *

உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தாராவர்.

* * *

ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லை.

* * *

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளும்.

* * *

தீய சொற்களாவன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய் முதலியனவும் வருணத்திற்கு உரியவல்லனவுமாம்.

* * *

உலகத்தோடொட்டவொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல்.

—பரிமேலழகர்.

* * *

கந்தருவ வழக்கம் என்பது கந்தருவரென்பார் ஈண்டுச்செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது. அது கந்தருவ மணம், அதனை ஒப்பதனைக் களவெனல் வேண்டும்.

* * *

கந்தருவ வழக்கம் போல்வது களவாதல் மூன்று காலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்தது.

* * *

ஒரு பொருளை வேறுபட்ட வாய்பாட்டாற் பல்காற் சொல்லுவது புனருத்தம்.

* * *

கந்தருவர்க்கும் ஞானக் குறைபாடும் தருமக் குறைபாடும் ஆள்வினைக் குறைபாடும் உண்டு.

* * *

ஒருகாலத்து ஓரிடத்து ஒருங்கு தோற்றின பொருள் ஒன்றனை ஒன்று முடித்தன எனப்படாமை காண்டும், ஆவிற்கு இருகோடு போல என்பது.

இருட்டகத்து விளக்குக்கொண்டு புக்கால் விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது; விளக்குவந்த பின்னரும் இருள் நீங்காது; விளக்கு வருதலும் இருணீக்கமும் உடனே நிகழும்.

* * *

கற்கந்தும் எய்போத்துங் கடுங்கண் யானையுந் தறுகட் பன்றியுங் கருவரையும் இருநிலனும் பெருவிசும்பு மனையார், ஆளி மொய்ம்பினர், அரிமான் றுப்பினர்—கூர்வே லிளைஞர்.

* * *

உடன் பிறந்து, உடன் வளர்ந்து, நீர் உடனாடிச், சீர் உடன் பெருகி, ஓல் உடனாட்டப், பால் உடனுண்டு, பல் உடனெழுந்து, சொல் உடன்கற்றுப், பழமையும் பயிற்றியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார்—கண்ணும் மனமும் கவரும் ஒண்ணு தன் மகளிர்.

* * *

ஒன்றொருவரின் முன்னந் தழை விழை தக்கனதொடுத்துமென் றுங், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்துமென்றும், போது மேதக்கன கொய்துமென்றும், மயிலொடு மாறுடுது மென்றுங், குயிலொடு மாறுகூவுதுமென்றும், அருவியாடி அஞ்சுனை குடைது மென்றும், வாசமலர்க் கொடியின் ஊசலாடுதுமென்றும் பரந்து, பிரிப. (இஃது ஆயமகளிர் பொழில் விளையாட்டு)

—இறையனார்.

தமிழ் நெடுங்கணக்கு

உரோமன் நெடுங் கணக்கையும் பிறமொழி நெடுங் கணக்குக்களையும் நோக்க, தமிழ்நெடுங் கணக்கு அறிவியன் முறைப்படி அமைந்ததொன்றென்பதும், கற்றற்கு மிகுதியும் எளியதொன்றென்பதும் விளங்கும். தமிழ்மொழி தமிழ் நெடுங்கணக்கில் எழுதப்படுதல் வேண்டுமேயொழிய பிற நெடுங்கணக்கில் எழுதப்படுதல் விரும்பத்தக்கதொன்றன்று. தெலுங்கு கன்னட தேவநாகரிக நெடுங் கணக்குக்களினும் தமிழ் நெடுங்கணக்கு கல்விப் பயிற்சிக்கு மிகவும் ஏற்றதொன் றாகும். குறைந்த எண்ணிக்கையுள்ள எழுத்துக்களாற் பல ஒலிகளையும் எழுதிக்காட்டக்கூடிய வசதியுடைத்தாயிருப்பது தமிழ் நெடுங்கணக்கே. முரண்பட்ட ஒலிக்குறிகளை எழுதுங்கால் அவற்றை கற்போர் எளிதில் உணர்ந்துகொள்ளும்படியான தெளிவான வரிவடிவுகள் தமிழ்நெடுங்கணக்கில் அமைந்துள் ளன. ஆகையால் அதிலுள்ள எழுத்துக்களை மிகுதிப்படுத் தவோ குறைக்கவோ வீணாக முயலுதல் வேண்டா. பன்னூற் றாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த தமிழ் முன்னோர் இக்கால நிகழும் அறிவியலறிஞர்களைவிட எத்தனை அறிவியலாற்றல் மிகுந்தவர்களென்பது இதனால் நன்கு விளங்கும்.

—முதலமைச்சர் கனம் சி. இராஜகோபாலாச்சாரியார்.

[காழிக் கண்ணன்]

(௧௬௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

௩. சிறுவன் முருகன்

என் களிப்பு நெடுநாள் நீடிக்கவில்லை. கோடைகாலம் நெருங்க நெருங்க, காட்டில் நீரும் வறளத் தொடங்கிற்று; புல்லும் கருகத் தொடங்கிற்று. இனி, அக்காட்டில் இருந்தால் விரைவில் வயிறு காய்ந்து சாகவேண்டியதுதான் என்பதை யுணர்ந்தேன். ஆகவே, ஒருநாள் அரைமனதுடன் அக் காட்டைவிட்டுப் புறப்பட்டேன்; அருகிலிருந்த சிற்றூரொன்றை நாடிச் சென்றேன். அவ்வூர் எல்லையில் தனியாக ஒரு வீடு தென்பட்டது. வீடு சிறியதாயிருந்தாலும் அது பார்வைக்கு அழகாகவும், சுற்றிலும் பெரிய தோட்டமும் மாட்டுக் கொட்டிலொன்றும் உடையதாகக் காணப்பட்டது. வீட்டின் முற்புறத்தில் கிழவி யொருத்தி உட்கார்ந்து புளி அரிந்து கொண்டிருந்தாள். கள்ளங் கபடற்ற அவள் முகத்தைப் பார்த்தபோது என்னையும் அறியாது எனக்கு அவள்மீது பற்றுதல் உண்டாயிற்று. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று சொல்வது உண்மையானால் அவளிடத்தில் எத்தகைய இரக்கமற்ற செய்கையும் பார்க்க முடியாது எனக் கண்டு கொண்டேன்; அத்துடன் அவள் ஏழைக் குடியைச் சேர்ந்த ஒரு முதுமகள் என்பதையுங் கண்டு கொண்டேன். உடனே மெல்ல அவளுக்குப் பின்புறஞ் சென்று என் தலையை அவள் தோளின்மீது சாய்த்து நின்றேன். அலறி யடித்துக்கொண்டு

கிழவி எழுந்தாள்; எழுந்தவள் என்னைப் பார்த்தாள். நான் ஆடாமல் அசையாமல் அமைதியாக நின்றேன்.

"பாவம்; உன்னைப் பார்த்தால் ஒரு முரட்டுக் காளையைப் போல் தோற்றவில்லை என்னிடம் முன்னிருந்த வெள்ளையனைப் போலவே நீயும் இருக்கிறாய். அந்தக் காளைக்குப் பதிலாக உன்னை என்னிடமே வைத்துக்கொள்ள எவ்வளவோ விரும்பு கிறேன். ஆனாலும் உன் சொந்தக்காரர் யாரோ? அவர் தேடிவந்தால் என் செய்வது?" என்று தானே வாய்விட்டுப் பேசிக்கொண்டே கிழவி என்னைத் தட்டிக் கொடுத்தாள்.

"பாட்டி! யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய்?" என்று வீட்டினுள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

"அப்பா, முருகா! ஏதோ ஒரு காளை என்னருகில் வந்து முகத்தை முகத்தைப் பார்க்கிறது. அதை விரட்டி விடவேண்டுமென்று என் மனத்திற் படவில்லை," என்று கிழவி விடை பகர்ந்தாள்.

"எங்கே, எங்கே! நான் பார்க்கிறேன்" என்று கூறிக் கொண்டே முருகன் வெளியே ஓடிவந்தான்.

முருகனுக்கு ஆறு அல்லது ஏழு வயது இருக்கலாம். அவன் இடுப்பில்மட்டும் ஒரு துண்டு கட்டியிருந்தான். அத் துண்டும் முழங்காலளவிற்குத்தான் வந்தது; எனினும், அஃது அழுக்கில்லாமலும் வெண்மையாகவும் இருந்தது.

என்னைப் பார்த்தவுடன் அவன் முதலிற் சிறிது அச்சங் கொண்டான்.

"பாட்டி, நானும் தடவிக் கொடுக்கட்டுமா?" என்று மெல்ல வினவினன்.

"ஆகா, அப்படியே செய்; ஆனால் புதிய காளை; ஒரு வேளை முட்டினாலும் முட்டிவிடும்; பார்த்துக்கொள்" என்று கிழவி எச்சரித்தாள்.

சிறுவன் நின்ற இடத்திலிருந்தே தன் சிறுகையை நீட்டி என்னைத் தொடப்பார்த்தான். கை எட்டவில்லை. மெல்ல அடிமேல் அடிவைத்துப் பூச்சிப் பிடிப்பவன்போல் என்னருகே வந்தான். எங்கு அச்சத்தினால் ஓடிவிடப்போகிறானோ என்று நான் அவனைப் பார்த்துக்கொண்டே என் காதுகளைமட்டும் ஆட்டினேன். முருகன் மெல்ல என் முதுகின்மீது ஒரு விரலை

வைத்தான். நான் அசையாமல் நிற்கவே, மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். அப்பொழுதும் நான் அசையவில்லை.

"பாட்டீ; நல்ல காளை பாட்டீ இது. எனக்கு இதைக் கண்டால் ஆசையாயிருக்கிறது" என்றான் முருகன்.

"ஆம், அது சரி; இருந்தாலும் இது யாருடைய காளையோ தெரியவில்லையே. எதற்கும் நீ விரைந்து சென்று மாட்டுக் கார குப்பனைக் கண்டு இது யாருடையதென்று தெரிந்து கொண்டுவா" என்றாள் கிழவி.

"பாட்டீ, நான் இதை ஓட்டிக்கொண்டு போகட்டுமா?" என்று முருகன் கேட்டான்.

"வேண்டாம் அஃது உன்னுடன் வருகிறதோ என்னவோ; நீ போ உடனே" என்றாள் பாட்டி.

முருகன் விரைந்து சென்றான். அவனைத் தொடர்ந்து நானும் சென்றேன். இதைப்பார்த்ததும், "ஓகோ, நீயும் வருகிறாயா, வா போகலாம்" என்று அன்புடன் சொல்லி முருகன் என்னுடன் நடந்தான்.

சேரியில் மாட்டுக்கார குப்பன் இருக்கும் இடம் வந்ததும் அவனைக் கூப்பிட்டு, "குப்பா, இது யார் காளை தெரியுமா உனக்கு?" என்று முருகன் வினவினான்.

"இது யாருதுங்க! நான் இதுவரிலே பார்த்ததே இல்லீங்களே, ஆண்டை. எதுக்கும் நீங்க கீயத்தெரு பட்டாமணியார் ஊட்டு வேலைக்கார ஐயாவைக் கேட்டுப்பாருங்க. அவுங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம்" என்று குப்பன் பணிவுடன் மொழிந்தான்.

சரியென்று முருகன் நேரே சிற்றூருக்குட்சென்று அவ் வேலைக்காரனை வினவினான். "இதுவா! இது இந்த ஊர் மாடாகவே தெரியுலியே! வேறே எங்கேருந்தோ ஓடிவந்த மாடு போலல்லவோ இருக்கு" என்று சொல்லிவிட்டு அவன் வேலை மேற் சென்றான்.

உடனே முருகன் வீடு திரும்பினான். அவன் முகத்தில் புன்னகை ததும்பிற்று. என்னை அவர்கள் வீட்டிலேயே வைத்துக்கொள்ளலாம் என்ற நினைப்பினால்தான் அவன் அவ்வாறு உளம் மகிழ்ந்தான் என்பதை நான் கண்டுகொண் டேன்.

"பாட்டி, இது இந்த ஊர் மாடே இல்லையாம். நாமே வைத்துக்கொள்ளலாம். யாராவது தேடிவந்து கேட்டால் கொடுத்து விடலாம்" என்றான் முருகன்.

"அப்படியானால் சரி. தொழுவத்திற் கொண்டுபோய்க் கட்டி வைக்கோல் போடு" என்றாள் கிழவி.

அதுமுதல் இரண்டு மூன்று ஆண்டுகள் அவர்கள் வீட்டிலேயே நான் சீருடன் என் காலத்தைக் கழித்து வந்தேன். வேளாவேளைக்கு வேண்டிய புல்லும் வைக்கோலும் கிடைத்தது. சந்தைநாளன்று சிறிது வண்டி யிழுக்க நேரும். அதை நான் ஒரு பொருட் படுத்துவதில்லை. முருகன் என்னிடம் மிகவும் அன்புடன் நடந்துவந்தான்.

ஆனாலும், பண வருவாய் கருதி என்னைச் சிற்றாரிலிருந்த வளவு ஒன்றில் அடிக்கடி கிழவி விட்டுவைத்து வரலானாள். வளவைச் சேர்ந்தவர்கள் செல்வம் நிறைந்தவர்கள்; குழந்தை குட்டிகள் பலர் அவர்கள் வீட்டிலிருந்தனர். மாதத்துக்கொரு முறை இரு முறை நான் அங்கே போய் இரண்டொரு நாள் தங்கும்போது அவர்கள் என்னை உழவிற்கட்டி அடிப்பார்கள்; அல்லது வளவிலுள்ள சிறுவர்கள் என்னை "ரேக்ளா" என்ற சிறு வண்டியிற் கட்டி ஓட்டுவார்கள். இது எனக்குப் பிடிப்பதில்லை. ஏனென்றால் அச்சிறுவர்களுக்கு இரக்கம் என்பது இன்னதென்று தெரிவதில்லை. கண்டபடி அவர்கள் என்னை அடித்துத் துன்புறுத்துவார்கள்.

இதைத் தவிர மற்றபடி என் காலம் மிகவும் நன்றாகவே கழிந்துவந்தது.

நரம்பு வலுக்குறைவினால் கண்ணொளி மழுங்கப் பெறுவோர் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் டெலாப்டிக் மாக்னிஃபையர் என்ற கண்ணாடியை அணிந்துகொண்டால் பொருள்களை நன்கு காணலாம். இக்கண்ணாடி ஒன்றை மூன்னூறு மடங்கு பெருக்கிக் காட்டு முறையில் மூன்று அல்லது ஐந்து சிறு கண்ணாடிகளைச் சேர்ப்பதனால் பெறப்பட்டதாகும்.

* * *

இறகுப் பேனாவால் எழுதும் வழக்கம் 1832-ஆம் ஆண்டு வரையிலிருந்து வந்தது. அவ்வாண்டில்தான் முதன்முதலாக மரக்கட்டைப் பேனா செய்யப்பட்டு வெளிவந்தது.

செந்தாமரை

[வித்வான் பே. கோவிந்தன்]

செந்தா மரையே! செந்தா மரையே!
அந்தா துகுக்குஞ் செந்தா மரையே!
சேற்றில் தோன்றினும் செம்மையில் திகழ்ந்து
நாற்ற மிகுந்துநீ ஏற்றம் பெறலையும்,
இன்னிசை பாடித் துன்னும் அளிகள்
முன்னர் நண்ணினும் பின்னர் நண்ணினு'ர
நறுந்தே னல்கி விருந்தயர் தலையும்,
பாயிருள் சீக்கும் ஞாயிறு கேள்வன்
மாலையிற் பிரிய வாடிக் காலையில்
தூய கதிர்க்கை தொடஇதழ் திறந்து
மலர்ந்து நோக்கி மகிழ்ந்துறை தலையும்,
பண்டைத் தமிழர் நின்பால்
கண்டனர் கொல்லோ? நீகண்டனையோ:

வண்டு

பொன்சிறை வண்டே! பொன்சிறை வண்டே!
இன்னிசை யிசைத்து மென்சிறை விரித்துத்
தென்வள நாட்டில் திரியும் வண்டே!
நின்வயி னொன்று நிகழ்த்துவன். நீபயில்
தமிழிசை யொன்றே தன்னிக ரில்லது;
அமிழ்தினு மினியது. அயல்மொழி யிசையோ
வல்லொலி மிகுந்து மெல்லொலி குறைதலின்
சொல்லுதற் கரிதுநின் மெல்லுறுப் பதனால்.
அதாஅன்று, கொடியிடை நுடங்கத் தளிருடை யுடுத்து,
கடிமலர் வளத்துக் குடிநற வேந்தித்
தமிழ்நில மடந்தை தருத லேய்ப்ப
வடநில மடந்தையர் வழங்கார் சிறிதும்
மென்பூங் குறிஞ்சி யின்றேன் முனையின்
பைந்தளிர் முல்லைப் பசுந்தேன் பெறுகுவை
பைந்தளிர் முல்லைப் பசுந்தேன் முனையின்
மருமிகு மருத மலர்த்தேன் பெறுகுவை
மருமிகு மருத மலர்த்தேன் முனையின
உருவமர் நெய்த லொண்டேன் பெறுகுவை
பொன்சிறை வண்டே அதனால்
எந்நாட் டிருக்கும் ஏகல் மறந்தே.

செய்திகளும் குறிப்புக்களும்

சென்ற சூலைத் திங்கள் 14-ஆம் நாள் கடம்பூர் புகைவண்டி நிலையத்தில் வண்டியிலிருந்து இறங்கி மீண்டும் அதனுள் ஏறப்போகும்போது கால் இடறி அடிபட்டுப் படுகாயமுண்ட சேலம் விலங்கு மருத்துவ உதவி அறுவையாளர் எஸ். வீரபாகுப் பிள்ளை அவர்கள் 18-ஆம் நாளன்று உயிர் துறந்தார்கள். அவர் குடும்பத்தினர்க்கு எங்கள் மனமார்ந்த இரக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

* * *

"எவ்வொரு பொருளையும் ஒரு மாணவன் தன் தாய்மொழியிற் கற்றால் நன்கு அறிந்துகொள்வான்... .....தாய்மொழியில் தகுந்த மரபுச் சொற்கள் கிடையாவிடின் வட மொழியிலிருந்தோ அல்லது ஆங்கிலத்திலிருந்தோ எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். பிற மொழிகளிலிருந்து மொழிகளைக் கடன்வாங்கிப் பயன்படுத்துவதால் ஒரு மொழி கெடுவது......ஆங்கிலமோ உலக மொழிகளெனக் கருதப் படுபவற்றுள் ஒன்று; ஆகையால் இந்தியர்கள் அதனைக் கற்றல் வேண்டும்......வட மொழியோ அழகியதோர் உயர்தனிச் செம்மொழி; நினைவாற்றலை மிகுத்துத் திருந்திய பயிற்சியை யளிக்க வல்லது. ஆகையால் பொதுவாக எல்லோரும், சிறப்பாக இந்துக்கள், அதனையும் பயிலுதல்வேண்டும்.

இவை திரு. சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் நிகழ்த்திய சொற் பெருக்குக் குறிப்புக்கள்.

* * *

"இந்தியை விருப்ப பாடங்களில் ஒன்றாகத்தான் அமைத்தல் வேண்டும்......வடநாட்டிற் பல மொழி பேசும் மக்களும் இந்தி மொழியைப் பேசினால் பொருள் தெரிந்துகொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்களாயிருப்பது இந்திக்கு மூலம் வட மொழியா யிருப்பதனாலேயே........ஆனால் மொழி கற்கப்புகின் (திருவாங்கூரைப் பொறுத்த வரையில்) முதலில் மலையாளம், பின் ஆங்கிலம், பின் இந்தி என்ற முறையிலேயே மொழிப் பயிற்சி பெறுதல்வேண்டும். மலையாளம், சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய மூன்றனுள் எதனுடைய வளர்ச்சியேனும் குறைவுபடும் வண்ணம் நேராகவோ மறை முகமாகவோ எடுக்கப்படும் முயற்சிகளைத் திருவாங்கூர் அரசாங்கத்தாரும், பல்கலைக் கழகத்தாரும், பொது மக்களும் திண்ணமாக ஆதரிக்க மாட்டார்கள்...... அறிவியலாராய்ச்சிக் கல்விகளெல்லாம் இந்நாட்டைப் பொறுத்த வரையில் மலையாள மொழியிலோ தமிழ் மொழியிலோதான் கற்பிக் கப்படுதல்வேண்டும். எனவே, திருவாங்கூர்ப் பல்கலைக் கழக நூற் பதிப்புத்துறையினர் உலகப் பொருள்கள் யாவற்றைக் குறித்தும் மலையாளத்திலும் தமிழிலும் ஏற்ற பாட புத்தகங்களை எழுதுவித்து வெளியிடும் காலத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்...........இந்தியிலோ போதிய நூல்கள் இல்லையாகையால் அது உயர்தரப் படிப்புக்கு இன்றியமையாததாகாது."

இவை திருவாங்கூர் திவான் ஸர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் சொற்பொழிவுக் குறிப்புக்களாகும்.

தாய்மொழி இந்தியாக இல்லாத மக்கள் இக்கால முறைப்படி தங்கள் தாய்மொழியையும் ஆங்கிலத்தையும் அதனுடன் இந்தியையும் கற்பது இன்றியமையாததாதலினால், இந்தியே தாய்மொழியாக வுடைய பெருந்தொகையினர் இந்திமொழிக்குப் பதிலாகத் தமிழையாவது தெலுங்கையாவது பயிலுதல் இன்றியமையாதென விதிப்பது நேர்மையாகும் என்ற கருத்தை "மாடர்ன் ரெவ்யூ" என்ற வங்காள உயர்தர ஆங்கிலத் திங்கட்டாள் வெளியிட்டுள்ளது.

*　　*　　*

இந்தியப் பொதுவருவாய்த் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய்களை கல்வியறிவில்லா ஆடவர்களையும் மகளிரையும் கல்வி பயிற்றுவிப்பதற்கென ஒதுக்கப்படுதல்வேண்டும் என்று அரசாங்கத்தார் முடிவு செய்யப்போகின்றார்களாம். இந்நன்முடிபு விரைவில் நடைமுறையில் உருப்பெறுதல் வேண்டும்.

*　　*　　*

காங்கிரஸ் சார்பாக இலங்கைக்குத் தூது சென்ற திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் கருதிச்சென்ற காரியத்தில் வெற்றியடையாவிட்டாலும் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு கிளை இயக்கத்தை உண்டாக்கி வைத்து இந்தியா திரும்பினார்!

*　　*　　*

சூரியவொளி பல மனநோய்களைப் போக்கவல்லது. அதனை உயிர் மருந்தெனவே கூறலாம். இன்னலுறுவோர்க்கு ஏற்ற நண்பன் சூரியனே. பொருட் செலவின்றிப் பலநோய்களைத் தீர்த்துக்கொள்ள விரும்புவோர் சூரியவொளியையே நாடுதல் வேண்டும். 1938-ஆம் ஆண்டில் பண்டென்றுமில்லாதபடி இங்கிலாந்தில் சூரியவொளி அதிகமாக இருந்தது; அவ்வாண்டு மரண விழுக்காடு மிகவுங் குறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. எலும்புருக்கியினாலும் ஈளை நோயினாலும் வருந்தும் குழந்தைகளைச் சூரியவொளி படும்படியான இடத்திற் போட்டு வைத்தால் அந்நோய்களின் ஆற்றல் குறைகின்றது. சூரியவொளியற்ற இடத்தில் நோயும் சாக்காடும் குடிகொண்டிருக்கும். இருள் நிறைந்த இடத்தில் புத்தி தடுமாறுவதற்கும் இதுவே காரணம். குடிவகைகளைவிடச் சூரியவொளியே மிகுந்த குருதி யோட்டத்தைத் தரவல்லது. நச்சுப் பொருள்களையும், துப்புரவின்மையையும் நோய்களையும் அழித்தொழிக்கும் ஆற்றல் சூரியவொளிக்கு உண்டு. சூரியபுடம் என்ற நோய்போக்குமுறை சில மருத்துச்சாலைகளில் கையாளப்பட்டு வருவது இதனாலேயேதான்.

இவை ஸர் ஹென்ரி கோவைன் என்ற ஆங்கில மருத்துவப் பெரியார் இலண்டன் டைம்ஸ் செய்தித்தாளில் எழுதியுள்ள கட்டுரையின் குறிப்புக்களாகும்.

நூல் வரவு

வார்தாக் கல்வித் திட்டம் :—சென்னை நேஷனல் பப்ளிஷிங் கம்பெனியார் வெளியிட்டது. காந்தியாரால் ஆய்ந்தமைக்கப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத் திட்டத்தைத் தமிழில் நன்கு விளக்குவது. 212 பக்கங்கள் கொண்ட அழகிய நூல். விலை அணா 10.

ஹோமியோ குடும்ப வைத்தியம் :—(முதற் பாகம்) பாளையங்கோட்டை டாக்டர் அ. திரவியம் எம். எல். எஸ். அவர்கள் எழுதியது. டாக்டர் ஹனிமான் அவர்களாற் கண்டுபிடிக்கப்பட்ட ஹோமியோப்பதி என்ற ஜெர்மன் ஒப்புமுறை மருத்துவத்தை எளிய முறையில் தமிழில் விளக்குவது. விலை அணா 10.

உயிரின் உண்மை :—"அல்லது நாம்-உயிரா உடலா?" திரு. T. S. இராஜூப் பிள்ளை எழுதியது. சென்னை அரண்மனைக்காரன் வீதி அருளாலயப் பதிப்பகத்தார் வெளியிட்டது. 84 பக்கங்கள் கொண்ட எளிய வேதாந்த தத்துவ நூல். விலை அணா 8.

தமிழர் திருமண நூல் :—வித்துவான் மா. இராசமாணிக்கம் B. O. L. அவர்கள் தொகுத்தது. சென்னைத் தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தார் வெளியிட்டது. பண்டைத் தமிழ் மக்களின் தூயமண முறையை நன்கெடுத்து விளக்குவது. 56 பக்கங்கள் கொண்டது. விலை அணா 1.

திருக்குறள் பொன்மொழிகள் :—திரிசிபுரம் பீமநகர் தமிழ் மறைத்தொண்டர் திரு. வி. எம். சுவாமி அவர்களால் எழுதப்பெற்று, திருச்சி பாலக்கரை செந்தமிழ்க் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. மணியன்ன 40 குறள்களை விளக்கும் அழகிய சின்னஞ்சிறுநூல். விலை ரூ. 0-0-6.

திருத்தொண்டர் புராணம்:—திரு. C.K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஆராய்ச்சி விளக்கவுரையின் 8-வது சஞ்சிகை. விலை ரூ. 1.

கிராமதூதன் :—கிராமமுன்னேற்றங் கருதித் தேசீய முறையில் வெளிவரும் ஒரு திங்கள் வெளியீடு. மதுரை இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்களால் வெளியிடப்படுவது. ஸ்ரீ வில்லிபுத்தூர் இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவருவது. ஆண்டுக் கட்டணம் ரூ. 1.

இண்டஸ் பகுதிப் பண்டை நாகரிகம் :—சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில வெளியீடு. 1935-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் இந்திய புதைபொருளாராய்ச்சித்துறைத் தலைவர் திரு. கே. என். தீட்சித் அவர்கள் நிகழ்த்திய ஸர். உவில்லியம் மேயர் சொற்பொழிவுகளின் தொகுப்பு. விலை ரூ. 2.

பழந் தமிழர் நாகரிகம் :—அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து. தாகூர் சட்ட விரிவுரையாளர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதிய சிறந்த ஆராய்ச்சி நூல். சேலம் செவ்வாய்ப்பேட்டை தமிழ்நெறி விளக்கப் பதிப்பகத்தார் வெளியிட்டது. 160 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-8.

இந்நூல்கள் சென்னைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற் கிடைக்கும்.

வித்வான் மு. வரதராஜ முதலியார், பி. ஓ. எல்.,
தலைமைத் தமிழாசிரியர்,
திருப்பத்தூர் நகராண்மை உயர்நிலைப்பள்ளி.
[1935-ஆம் ஆண்டில் வித்வான் தேர்வில் முதன்மையாகத்
தேறி ஓராயிர ரூபா பரிசு பெற்றவர்]